# குக ஒளி

திருமதி குககுமாரி விஜயரகுநாதன்
அதிபர் அவர்களின்



# மணிவிழா மலர்

09-11-2017

வெளியீடு:
யாழ்/நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயம்
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கற்றாய்ந்து ஒழுகுக"

# குக ஒளி

எமது வித்தியாலயத்தில் நிறை பணியாற்றி
நல் வழி காட்டிய அதிபர்
திருமதி. குககுமாரி விஜயரகுநாதனின்
பணி நயக்கும்

வித்தியாலயக் குடும்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | ஆசிச் செய்திகள் | பக்க எண் |
|---|---|---|
| 01. | பாடசாலைக் கீதம் | 1 |
| 02. | நல்லை குருமகா சந்நிதானம் | 2 |
| 03. | ஜாக்கிரத சைதன்ய சுவாமிஜி | 3 |
| 04. | சைவ – தமிழ் | 4-5 |
| 05. | மணிவிழாக் காணும் மாணவியை | 6-7 |
| 06. | நேர் முகாமைத்துவ சிந்தனையாளர் | 8 |
| 07. | உளமார வாழ்த்துகிறேன் | 9 |
| 08. | மகிழ்வுற வாழ்த்துகிறோம் | 10 |
| 09. | வாழ்த்துச் செய்தி | 11 |
| 10. | நிறைகுடமாய் வாழ்பவர் | 12-13 |
| 11. | மணிவிழா நாயகிக்கு | 14-15 |
| 12. | புத்துயிரளித்தவர் | 16 |
| 13. | மனம் மகிழ வாழ்த்துகிறோம் | 17-19 |
| 14. | வாழ்த்துப்பா | 20-22 |
| 15. | என் அன்பான வாழ்த்துக்கள் | 23 |
| 16. | எங்கள் அதிபர் | 24 |
| 17. | நினைவலைகள் | 25-27 |
| 18. | எம்மை விருட்சமாக்கினீர் | 28 |
| 19. | பண்பால் உயர்ந்து நிற்கும் மாதரசி | 29 |
| 20. | எம் அன்பு அதிபரே | 30 |
| 21. | எங்கள் சொந்தம் நீடு வாழ்கவே | 31-32 |
| 22. | மணிவிழா நாயகியை மங்கையற்கரசி வாழ்த்துகிறாள் | 33 |
| 23. | மணிவிழா நாயகியின் மகத்துவமான வாழ்க்கைப் பாதையில் | 34-36 |
| 24. | நயங்கள் பல கொண்ட நல் அதிபர் | 37 |
| | **கட்டுரைகள்** | |
| 25. | உற்றறி உளவியல் | 38-42 |
| 26. | ஆசிரியர்களது நேர முகாமைத்துவமும் தொழில்முறை முன்னேற்றமும் | 43-48 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## யா/நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயம்

அதிபர்

### திருமதி .குககுமாரி விஜயரகுநாதன்

(B.A, Dip in Edu, M.E.D, M phil, S.L.P.S)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைக் கீதம்

ராகம் : மோஹனம் தாளம் : ஆதி (திஸ்ரம்)

## பல்லவி

வாழ்க நல்லூர் விக்னேஸ்வரா வித்தியாலயம் - எங்கள்
வாழ்வில் கல்வி கலைகள் தந்த
வண்டமிழ் அன்னையின் கோயில்

## அனுபல்லவி

சூழ்க என்றும் கல்வி கலை
சோபித்திடும் கல்விக்கூடம்
ஆழ் கலைகள் பண்பு
அள்ளித்தரும் எங்கள் அன்னை (வாழ்க)

## சரணம்

கற்பக விநாயகரின் கருணை வீதி உறைபவள்
இற்றரையில் கல்விக்கலை எமக்கு ஊட்டி மகிழ்பவள்
கற்றிடும் மாணவர்க்கு கனிந்து கல்வி கொடுப்பவள்
"கற்று ஆய்ந்து ஒழுகு" என்னும் கருத்தை அள்ளித் தருபவள்

அதிபரையும் ஆசிரியர் அனைவரையும் பணிகுவோம்
மதிநிறைந்த கல்வி கலை மகிழ்ந்தெமக்கு தந்திடுவார்
பதியான தென்நல்லூர் பாங்கமரும் எங்கள் அன்னை
அதிஞானம் தந்தெமக்கு ஆசியருள் கலைமாதா (வாழ்க)

ஆக்கம் : மஹாவித்வான் ந.வீரமணி ஐயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன இரண்டாவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளின் ஆசியுரை

மாறிவரும் கல்வி உலகில் மாணவியாய் கல்விதனை சிறப்புறவே பெற்று, பல்கலைக்கழகமதில் பட்டங்கள் பலவும் பெற்று மகத்தான ஆசிரியப் பணியினை 33 ஆண்டுகளாய் சிறப்புடனே ஆற்றி கடந்த எட்டு வருடங்களாக நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயத்தின் அதிபராகக் கடமையாற்றி மணிவிழாக்காணும் மணி விழா நாயகி திருமதி. குககுமாரி விஜயரகுநாதன் அவர்களை வாழ்த்துவதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

கடமை தவறாது கண்ணியமாகவும், கட்டுப்பாட்டுடனும் தனது சேவையை நிறைவாக ஆற்றி ஏழை மாணவர்களின் வாழ்வு சிறக்க உன்னதமான பணியினை செம்மையாக மேற்கொண்டு கல்விக் குடும்பமான ஆசிரியர் சமூகத்துடன் நட்புறவினைப் பேணி, மாணவர்களின் மனதில் நீங்கா இடம் பிடித்த அதிபரின் சேவை போற்றுதற்குரியது.

இறைபக்தியும், கடமை உணர்வும், சமூக நல்லுறவும் பேணிப் போற்றி வாழும் இவர் நீண்ட ஆயுளினையும் நிலைத்த புகழையும் பெற்று தனது குடும்ப உறவுகளுடன் இணைந்து நீடூழி காலம் வாழ இறையருள் வேண்டி நல்லாசி கூறி அமைகிறோம்.

**"சேவையின் உயர்வே நிலையான வாழ்வு"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜாக்ரத சைதன்யா சுவாமிகளின்

# ஆசியுரை

**"ஆச்சார்யா தேவோ பவ"**
**தைத்ரிய உபநிவுத்**
**"ஆச்சார்யாரைத் தெய்வமாகப் போற்றுக**

---

இத்தகைய சிறப்பு வாய்ந்த ஆசிரியப் பணியை ஏற்று 25 வருடங்கள் செவ்வனே சேவையாற்றி, இன்று ஓய்வு பெற உள்ளார் திருமதி.குககுமாரி விஜயரகுநாதன் அம்மையார். இவர் இணுவில், மருதனாமடம் எனும் சைவமும் தமிழும் தழைத் தோங்கும் இடத்தில் பிறந்து, நல்லைக் கந்தப் பெருமான் கோயில் கொண்டிருக்கும் நல்லூரில் வாழும் பெரும் பேறு பெற்றுள்ளார்.

அம்மையால் அவர்கள் யாழ் பல்கலைக்கழகத்தில் தனது உயர் கல்வியைப் பெற்று பொருளியல் துறைப் பட்டதாரியாகிய பின்னர் ஆசிரியத் தொழிலை ஏற்றுப் பல்வேறு இடங்களில் பணியாற்றி தனது தற்போதைய வதிவிடமான நல்லூரில் மங்கயற்கரசி வித்தியாலயத்தில் பணியாற்றும் போது அதிபராகப் பதவியுயர்வு பெற்றார். அதனைத் தொடர்ந்து நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் தொடரந்து 8 வருடங்கள் அதிபராகக் கடமையாற்றி பாடசாலையின் உயற்சிக்காக உழைத்தார். அக்காலப்பகுதியில் அடியேனையும் அப்பாடசாலைக்கு அழைத்து மாணவர்களுக்கு விழுமியங்களையும் பண்பாட்டையும், சமயத்தையும் போதிக்கும் ஏற்பாட்டைச் செய்து மாணவர்களின் ஒழுக்கத்தை மேம்படுத்த வேண்டும். என்ற நல்லெண்ணத்தை நிறைவேற்றினார்.

தனது சேவைக்காலத்தில் யாழ் பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் கற்கை நெறிகளைப் பயின்று மேலதிக பட்டங்களைப் பெற்றுள்ளார். இவ்வாறாக தான் தன்னைக் கல்வி மட்டத்தில் உயர்த்தியதுடன் மாணவ சமுதாயத்தையும் கல்வியில் மட்டுமன்றி ஆன்மீக மற்றும் ஏனைய செயற்பாடுகளிலும் உயர வழிவகுத்தார். இவர் அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்றாலும் அகவை அறுபதில் இருந்து ஆரம்பிக்கும் இளம் சமூகத்தின் நலன்கருதி. மேலும் சுயநலமின்றி, பலனை எதிர்பாராமல் தனது சேவையை ஏதாவது ஒரு வகையில் தொடரவேண்டும் என விரும்புகிறேன்.
இவர் தனது ஓய்வுக்காலத்தில் நல்லாரோக்கியத்துடன் தீர்க்க சுமங்கலியாக வாழவும் இவரது சேவைகள் பூரணமாக அமையவும் ஆசிவேண்டி எல்லாம் வல்ல பரம் பொருளையும், பூஜ்ய குருதேவரையும் பிரார்த்திகின்றோம்.

**"தீர்க்க சுமங்கலி பவ"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி. குககுமாரி விஜயரகுநாதன் நீண்ட ஆசிரியப் பணிக்குப்பின் தனது 60தாவது வயதில் சேவையிலிருந்து ஓய்வு பெறுகின்றார். பட்டதாரி ஆசிரியராக அரச சேவையில் இணைந்த இவர் கல்முனை கார்மல் பாத்திமா கல்லூரியிலும் இருமுறைகள் இராமநாதன் கல்லூரி, வவுனியா மத்திய மகாவித்தியாலயம், நல்லூர் மங்கையற் கரசிப் பாடசாலை ஆகியவற்றில் ஆசிரியப் பணிபுரிந்து பின்னர் நல்லூர் தெற்கு ஸ்ரீவிக்னேஸ்வரா வித்தியாலயத்தில் அதிபராகி 2017 நவம்பர் 9 ஆம் திகதி ஓய்வு பெறுகின்றார்.

இவர்களது ஆரம்ப இடைநிலைக் கல்வியை முழுமையாக இராமநாதன் கல்லூரியில் பெற்றார். இவர் சேர்.பொன் இராமநாதன் காணவிரும்பிய சைவ தமிழப் பெண் கல்வியைப் பெற்றவர். மேலும் இவரது பெற்றோர்கள் திரு.திருமதி.ஆறுமுகம் இருவரும் தமிழாசிரியர்களாக இருந்ததால் இவரது சைவ – தமிழ்பெண்கல்வி விழுமியங்கள் மேலும் வலுப்பெற்று இருந்தன. இவரது வீட்டுச் சூழலும், பாடசாலைச் சூழலும் ஒரே மாதிரியமைந்தது இவரது கல்வி மேம்பாட்டுக்குப் பெரிதும் உதவின.

பாடசாலைக் கல்வியை முடித்து, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திற்கு தெரிவாகி பொருளியலில் சிறப்புப் பட்டதாரியாக வெளியேறினார். இதன் பின்னர் கல்வியியல் பட்டப்பின் டிப்ளோமா தகைமையையும் இதனைத் தொடர்ந்து கல்வியியலில் முதுமாணி பட்டத்தையும், முதுதத்துவமாணிப் பட்டத்தையும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் பெற்றார். மேலும் அதிபர் சேவையில் சித்தி பெற்று கல்வி நிர்வாகத் துறைக்கு பிரவேசித்துள்ளார். இவரது கணவர் கணக்காளர் விஜயரகுநாதனும் தன் மனைவியின் கல்விப்பணிக்கும், மேற்படிப்புகளுக்கும் பெரும் உதவியாக இருந்துள்ளார்.

இவர் ஆசிரியராக இருந்த பொழுது சிறந்த பாட ஆசிரியராக இருந்ததுடன் மாணவ சங்கங்களைச் சிறப்பாக நடாத்துவதிலும் மாணவர்களின் பேச்சுப் போட்டிகள், கலை நிகழ்வுகளுக்கு ஆயத்தப்படுத்துவதிலும் பெரும் பங்காற்றினார். இவரால் வழிப்படுத்தப்பட்ட மாணவர்கள், சான்றிதழ்களை வெற்றிக் கிண்ணங்களை, வெற்றிக் கேடயங்களை பாடசாலைகளுக்குப் பெற்றுக்கொடுத்தனர்.

நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் அதிபராக இருந்த பொழுது யுத்தத்தால் பெற்றோரை இழந்த பிள்ளைகள், வறுமைக்குட்பட்ட பிள்ளைகள், குடும்ப வன்முறைக்குட்பட்ட பிள்ளைகள் சமூகப்புறந்தள்ளலுக்குட்பட்ட துஷ்பிரயோகத் திற்குட்பட்ட மற்றும் மெல்லக்கற்போருக்கு பாடசாலைக் கல்வியைக் கொடுப்பதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அயராது உழைத்ததுடன் வெற்றியும் கண்டார். இதனால் இவர், பெரும் எண்ணிக்கையான மாணவ சமூகத்தின் அபிமானத்திற்கும் அன்பிற்கும் உரியவராகத் திகழ்கின்றார்.

இவர் தனது சகோதரர்களை திரு.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி, (இளைப்பாறிய கல்வி அதிகாரி) திரு.குகமூர்த்தி (தொழில்நுட்ப நிர்வாக அதிகாரி) மற்றும் புகழ்பூத்த சமய – சமூகப் பணியாளர் கலாநிதி ஆறு. திருமுருகன் போல சிறந்த தமிழ் - சமய பேச்சாளராகவும் சமூக சேவகியாகவும் தாயார் திருமதி.ஆறுமுகம் போல் உற்றார், உறவினர், அயலவர்கள், நண்பர்களை நன்கு உபசரிப்பவராகவும், திகழ்கின்றார். அன்ன மிடுவதில் நிறைவு பெறுபவர் மேலும் மக்களின் இன்ப துன்பங்களிலும் பங்குகொண்டு தன்னாலான உதவிகள், ஆறுதல்கள், வழிகாட்டல்களை வழங்குவதில் என்றும் பின்னிற்பதில்லை. இவரின் பிள்ளைகள் கல்வியிலும், தொழிலிலும் சிறப்பாக விளங்குவது இவரது சேவைக்குக் கிடைத்த பயனாகும். இவரது சேவைகளுக்கு இவரது சகோதரிகளும் நிறைவான ஒத்துழைப்புக்களை வழங்குவதைக் காண முடிகின்றது.

அறிவிலும் ஆற்றலிலும் அனுபவத்திலும் சிறந்து விளங்கும் திருமதி.குககுமாரி விஜயரகுநாதன் அவர்களது சிறந்த பண்புடமை சகலரையும் ஈர்ப்பதாக அமைந்திருக் கிறது. தனது இனிமையான சுபாவத்தாலும் நகைச்சுவையுள்ளத்தாலும் அனைவ ரையும் கவர்ந்து வைத்திருக்கும் அவர் எல்லோருடனும் அன்புடன் பழகி நல்லுறவைப் பேணுபவர்.

எளிமையும் மனிதநேயமும் கருணையும் நிறைந்த திருமதி.குககுமாரி விஜயரகுநாதன் அவர்களின் ஓய்வுக்காலம் சிறப்பாக அமையவும் அவர் நெடுங்காலம் சீரும் சிறப்புடன் வாழவும் தொடர்ந்தும் அவரது கல்விப்பணிகள் சமூகத்திற்குக் கிடைக்கவும் வேண்டி எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்தி அமைகின்றேன்.

**பேராசிரியர். இலக்கிய கலாநிதி.பொ.பாலசுந்தரம்பிள்ளை**

**BA(cey) Phd (Durham) D.W.H(Jafna)**

**மூத்த வாழ் நாட் பேராசிரியர் / முன்னாள் துணை வேந்தர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அகவை 80 இல் அமுத விழாக் கண்ட ஆசிரியை அகவை 60 இல் மணிவிழாக் காணும் தம் மாணவியை வாழ்த்துகிறார்.

இன்று அகவை அறுபதை அடைகின்ற திருமதி.குககுமாரி விஜயரகுநாதன் அவர்கள் என்றும் என்னுடைய அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய ஓர் சிறந்த மாணவி ஆவார். அவரிடம் காணப்பட்ட சிறந்த நற் பண்புகளே என் மனதை கவர்ந்தன. ஆன் மீக நாட்டமும் கலாசாரமும் மிகுந்த சைவ பெரியோர்கள் வாழும் இணுவையம் பதியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். சைவப் பாரம்பரியங்களைப் பேணிக்காத்து வரும் ஒரு நல்ல குடும்பத்தில் பிறந்து தன்னுடைய நற்பண்புகளினால் தான் பிறந்த கிராமத்திற்குப் பெருமை தேடிக்கொடுத்தவர் என்றால் மிகையாகாது.

சைவமும் தமிழும் தழைத்தோங்கும் யாழ் மருதனார் மடத்தில் கலை, கலாசாரம், கல்வி, சமயம், மற்றும் பாரம்பரிய பண்பாடுகளைப் பேணிக்காத்த சேர் பொன் இராமநாத வள்ளலால் அமைக்கப்பட்டது. எமது புகழ் பூத்த இராமநாதன் கல்லூரி எமது ஸ்தாபகர் ஒரு தீர்க்கதரிசி சிறந்த அறிஞர். அகிலமே போற்றும் அரசியல்வாதி. நமது வருங்கால சந்ததியினரின் வாழ்விற்கு ஒளி கொடுக்கும் நோக்கில் பெண்களுக்கென தனித்துவமாக அமைக்கப்பட்டது எங்கள் கல்லூரி. கருதரிய சிற்சபையில் ஆனந்த நிர்த்த மிட்டுக் கொண்டிருக்கும் கருணாகரக் கடவுள், என்றும் எம் மாணவிகளுக்கு அருள் பாலித்த வண்ணம் இருக்கிறார்.

இத்தகைய மாண்புமிக்க கல்லூரியில் நான் மாணவியாக ஏழு ஆண்டுகளும் ஆசிரியராகத் தொடர்ந்து முப்பத்தைந்து ஆண்டுகளும் கடமையாற்றும் பாக்கியமும் பெற்றேன். ஆயிரம் ஆயிரம் நன் மாணாக்கரை உருவாக்கினேன். அத்தகைய நன் மாணாக்கரில் ஒருவர் தான் என் அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய திருமதி.குககுமாரி விஜயரகுநாதன் அவர்கள். சிறு பராயம் தொடக்கம் மேல் வகுப்புவரை என்னுடைய அபிமானம் மிக்க மாணவியாகத் திகழ்ந்தார். சிறு வயதிலிருந்தே கல்வி கற்பதில் மிகுந்த ஆர்வமும் ஊக்கமும் காட்டினார். என்றும் முகத்தில் புன்சிரிப்புடன் அமைதியாக இருந்து பாடங்களைக் கிரகிக்கும் ஆற்றல் உடையவர். எமது கல்லூரியில் நடைபெற்ற போட்டிகளிலும், வெளி மாவட்ட, மாகாணங்களில் நடாத்தப்பட்ட போட்டிகள் எல்லாவற்றிலும் மிக்க ஆர்வத்துடன் பங்குபற்றி வெற்றியடைவார். அவற்றில் முதலிடத்தைப் பெற்று தங்கப்பதக்கம், வெற்றிக் கேடயங்களுடன் எமது கல்லூரிக்கும் பெருமை தேடித்தந்தவர். பல்கலைக் கழகத்திலும் சீரான கல்வியைப் பெற்று முன்னணியில் திகழ்ந்து ஒரு சிறந்த பட்டதாரியாக விளங்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"கற்க கசடற கற்றவை கற்ற பின் நிற்க அதற்குத் தக"*

என்ற திருவாக்கிற்கமைய கல்வியை சிறப்பாகக் கற்று வள்ளுவப் பெருந்தகையின் கூற்றை உறுதிப்படுத்தினார். இவருடைய அயராத உழைப்பினாலும் ஊக்கத்தி னாலும் கல்வியில் பல தகமைகளைப் பெற்று மென்மேலும் உன்னத நிலையை அடைந்தார். நாட்டின் நற்பிரஜைகளை உருவாக்கும் புனிதமான ஆசிரியப்பணி போற்றத்தக்கது. இவர் தான் கற்ற கல்லூரியிலேயே இப்புனிதமான ஆசிரியப் பணியைத் தொடர்ந் தார். இவருக்குக் கற்பித்த ஆசிரியர்கள் இவரை இன்முகத்துடன் வரவேற்று சரியாசனம் வைத்தனர். அந்த அழகைக் கண்டு யான் பூரித்தேன். கற்பித்தலில் ஆழமான ஈடுபாடும் பொறுப்புணர்வும் மிக்க ஓர் ஆசிரியராகத் திகழ்ந்தார்.

நம் மாணவச்செல்வங்களின் உள்ளங்களில் எப்பொழுதும் நிறைந்துள்ளார். ஆழ்ந்த அறிவும் அகன்ற பெருமனமும் உடையவர். நாவன்மைமிக்க பேச்சாளராகவும் திகழ்ந்து எல்லோருடைய உள்ளங்களிலும் நிறைந்துள்ளார். அன்பு அரவணைப்பு உபசரிப்பு கடமை என்பன இவரின் அணிகலன்கள்.

இவரிடம் காணப்பட்ட திறமை, சாதுரியம், ஆளுமை இவருக்கு அதிபர் பதவியைத் தேடிக்கொடுத்தது. அன்பும் அரவணைப்பும் நிறைந்த அதிபராகக் கடமை, கண்ணியம் மிகுந்தவராக, சிறந்த நிர்வாகியாக விளங்கினார். ஒரு சிறந்த வழிகாட்டி யாக எல்லோருடைய பாராட்டுக்கும் உரியவராக ஒரு கலங்கரை விளக்காகத் திகழ்ந்தார். அவருடைய தன்னலங் கருதாத சேவையினால் "யாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்" என்ற பண்பாட்டிற்கு அமைய நாம் பிறந்த இம் மண்ணிற்கு சேவையாற்றி நற்பிரஜைகளை உருவாக்கியுள்ளார்.

எனது மாணவி மிகுந்த குருபக்தி உடையவர் மாதா, பிதா, குரு, தெய்வம் இவர்களை வணங்கியே எக்கருமத்தையும் ஆரம்பிப்பார். ஒரு சிறந்த குடும்பப் பெண்ணாக இல்லாளாக, இல்லக்கிழத்தியாக, வாழ்க்கைத் துணைவியாக எல்லோருக்கும் ஒரு எடுத்துக்காட்டாக விளங்குகிறார். இத்தகைய சிறப்புக்க ளையும் நற்பண்புகளையும் கொண்டவரே என்றும் என்னுடைய அன்புக்குரிய மாணவி என்று கூறுவதில் பெருமை அடைகின்றேன். சிறந்த மாணவியாக, புனிதமான ஆசிரியையாக, ஆளுமைமிக்க அதிபராக, மங்கையர் திலகமாக எனது அபிமான மாணவியைப் பார்க்கும் பொழுது என்னுடைய உள்ளம் பெருமிதம் அடைகின்றது.

திருமதி. குககுமாரி விஜயரகுநாதனும் அவருடைய அன்பான குடும்பமும் என்றும் சீரும் சிறப்புடனும் பல்லாண்டு பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகிறேன்.

**திருமதி.சுபத்திராதேவி விவேகானந்தன்.** UK

**ஓய்வுநிலை அதிபர், யா/இராமநாதன் கல்லூரி, சுன்னாகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நேர் முகாமைத்துவ சிந்தனையாளர்.

அகவை அறுபதில் கால் பதிக்கும் பல்கலைக்கழக தோழி திருமதி.குககுமாரி விஜயரகுநாதன் அவர்களின் சேவைக்கு நயப்புரை வழங்குவதில் பெருமிதம் கொள்கின்றேன். தமிழும், சைவமும் கலந்து மணம்வீசும் இணுவை மண்ணில் தோன்றி கொடைவள்ளலார் இராமநாதனின் கல்லூரியில் ஆரம்ப இடைநிலைக் கல்வியைக்கற்ற பெருமையும், அங்கேயே கற்பிக்கும் பாக்கியமும் பெற்றவர். அம்பாள் ஆசிரியர், கல்விப் புலத்தில் பல பரிமாணங்களில் தனது சேவையை வழங்கியுள்ளார். ஆசிரியராக, பகுதிநேர விரிவுரையாளராக, நல் அதிபராக திறம்பட தமது பணியினை நிறைவு செய்துள்ளார்.

கல்விக் குடும்பத்தில் பிறந்து சகோதர சகோதரிகளுடன் ஒற்றுமையாக ஒரே மனையில் வாழ்ந்து கல்விக்கும், சமூகத்திற்கும், ஆலயத்திற்கும் தொண்டாற்றுகின்ற பெருமைக்குரியவராக விளங்குகின்றார்கள். நேர் மனப்பாங்கும், வார்த்தையை அளந்து பேசும் திறனும் நல்ல சிந்தனைகளை வழங்கும் ஆற்றலும் கொண்டவர். அவருடைய பாடசாலைக்கு பல தடவை சென்றிருக்கின்றேன். அப்பாடசாலையில் அமைதியைக் காணமுடியும். சகோதர உறவும் நேர் முகாமைத்துவத்தையும் அவரிடம் கண்டுள்ளேன். ஆபத்தின் விளிம்பில் இருக்கும் மாணவர்களின் ஆற்றலை வளர்க்கும் முயற்சியை பாராட்டியிருக்கின்றேன். இத்தகையபெருமைக் குரிய என்தோழி ஓய்வில் செல்வது தவிர்க்கமுடியாத ஒன்றாக இருந்தாலும் சமூகத் தொண்டில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் அவர்கள் குடும்பத்திற்கு பக்கபலமாக இருந்து செயலாற்ற எல்லாம் வல்ல பரம்பொருளை வேண்டுகின்றேன்.

**அ.அகிலதாஸ்**
**பிரதிக் கல்விப் பணிப்பாளர்.**
**கல்வி முகாமைத்துவம்.**
**யாழ்ப்பாண கல்வி வலயம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உளமார வாழ்த்துகிறேன்

அடக்கமான சுபாவம், எதையும் அமைதியாக ஏற்கும் பண்பு உயர்ந்த கல்வித் தகைமையிலும் பணிவு, மனித நேயத்துடன் உடனே உதவுகின்ற தன்மை என்றும் சிரித்த முகத்துடன் இருக்கும் அழகு.

இவை அனைத்தும் "அம்பாள்" என அன்போடு அழைக்கும் குககுமாரியின் என் மனப்பதிவுகள் சைவமும், தமிழும், கலைகளும் செழித்தோங்கும் இணுவையம்பதியில் சைவப் பாரம்பரியமிக்க குடும்பத்தில் இவர் பிறந்ததும், இராமநாதன் கல்லூரிக் கல்வி தந்த பண்பாடும் இவரது வெற்றிகரமான வாழ்வியலுக்கு அடித்தளங்களாகும்.

1992ஆம் ஆண்டு இராமநாதன் கல்லூரியில் நான் பதவியேற்ற காலம் தொடக்கம் திருமதி. குககுமாரி விஜயரகுநாதன் அதிபர் - ஆசிரியர் என்ற உறவுக்கப்பால் உடன் பிறவாத சகோதரியாக இன்றுவரை என்னுடன் வாழ்கிறார். இராமநாதன் கல்லூரியில் கல்வி கற்ற காலத்தில் கல்லூரிக்கு பெருமை சேர்த்த முதன்மை மாணவியாக இருந்ததுடன் ஆசிரிய சேவையில் நல் ஆசானாக அதிபர் சேவையில் பூரணத்து வத்தை கண்டு அகவை அறுபதை நிறைவு செய்கிறார். இராமநாதன் கல்லூரியில் இவர் நேர்த்தியாக செய்த பணிகள் அனைத்தும் மறக்க முடியாதவை. கற்பித்த பாடங்களின் பெறு பேறுகளின் உயர்வும் கலை நிகழ்வுகளின்போது காட்டிய ஒத்துழைப்பும் கல்லூரியல் நிலைத்து நிற்கும் பதிவுகளாகும். தான் கற்ற கல்லூரியில் அவர் கொண்டிருந்த பற்றை நான் அங்கே கண்டேன்.

கல்விச் செல்வத்தை மாணவர்களுக்கு வாரி வழங்கிய, விருந்தோம்பும் பண்பில் உச்சத்தை தொட்ட சரஸ்வதி ரீச்சரின் மகளாக பிறந்த இவர் தனது வாழ்விலும் அந்தச் சுவட்டைப் பதித்திருக்கிறார். அகவை அறுபதை அடைந்த பின்னரும் கல்வியில் உயர்ந்திருக்கும். இவரது சேவையை கல்விச் சமூகம் தொடர்ந்து பெறவேண்டும். கல்விப் பணியில் நிறைவைக் கண்ட இவர் தனது கணவர் அன்பான பிள்ளைகள் மூவரினதும் உயர்வையும் நிறைவையும் கண்டு நீண்ட காலம் வாழ வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

**திருமதி. ஆனந்தி . சிவஞானசுந்தரம்**<br>
**முன்னாள் அதிபர்**<br>
**இராம நாதன் கல்லூரி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிழ்வுற வாழ்த்துகிறோம்

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பேராசிரியர்
### திரு.அ.சண்முகதாஸ்
### அவர்களின் வாழ்த்துச் செய்தி

திருமதி. குககுமாரி விஜயரகுநாதன் அவர்கள் அகவை அறுபதை நிறைவு செய்து அடுத்த அறுபதுச் சுற்றுக்குள் வெற்றிகரமாக எல்லா நலன்களும் வளங்களும் பெற்று நடைபோடவேண்டுமென வாழத்துதற்காக அவருடைய கல்லூரியினர் விழா எடுக்கின்றனர். இந்த வேளையில் நாமும் அவரை வாழ்த்த விழைகிறோம்.

"அம்பாள்" என உறவினராலும் உற்றாராலும் அன்புடன் அழைக்கப்பெறுபவர் திருமதி. குககுமாரி விஜயரகுநாதன். அவரைப் பல்கலைக் கழக மாணவநிலையிலிருந்து நாம் அறிவோம். அவருடைய முயற்சி எல்லோருக்கும் எடுத்துக்காட்டாக அமையக் கூடியது. கல்வியிலே பெறவேண்டிய பட்டங்களை உரிய காலங்களிலே பெற்றவர். அவர் நல்ல ஆசிரியராக, அதிபராக பணி செய்துள்ளார். அதே வேளை குடும்ப நலன்களையெல்லாம் கவனிக்கும் பொறுப்புடையவராகவும் இருந்துவந்துள்ளார்.

திருமதி. விஜயரகுநாதனின் மணிவிழா சிறப்புற அமைய எம்முடைய வாழ்த்துக்களைக் கூறி மகிழ்கிறோம். மணிவிழா நாயகியும் அவர் குடும்பத்தினரும் பெரு வாழ்வு வாழ்ந்து மகிழ்வுற வாழ்த்துகிறோம்.

பேராசிரியர் அ. சண்முகதாஸ்
தகைசார் வாழ்நாட் பேராசிரியர்
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்

பேராசிரியர் மனோன்மணி சண்முகதாஸ்
முன்னாள் ஆய்வுப் பேராசிரியர்
கக்சுயின் பல்கலைக் கழகம்
தோக்கியோ, ஜப்பான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர்
# திரு.ந.தெய்வேந்திரராஜா அவர்களின் வாழ்த்துச் செய்தி

திருமதி. கு.விஜயரகுநாதன் அவர்களின் சேவை நயப்பை முன்னிட்டு அவருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

அவரது ஆன்மீக ஈடுபாடு, ஆழ்ந்த புலமை, முன்மாதிரியான நடத்தை, உதவும் மனப்பான்மை என்பன புதுமையானவையல்ல. ஏனெனில் அவர் ஓர் ஆசீர்வதிக்கப்பட்ட குடும்பத்தில் இருந்து வந்தவர்.

திருமதி. கு.விஜயரகுநாதன், அவரது தாயாரால் முறையான நற்பண்புகள் ஊட்டப்பட்டு வளர்க்கப்பட்டவர். அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பதற்கு அவர் ஒரு உதாரணம். கல்வித்துறையில் ஆசிரியராக, அதிபராக பணியாற்றியது மட்டுமன்றி உயர் கல்வி நிறுவனங்களிலும் போதனாசிரியராக, வருகைதரு விரிவுரையாளராக கடமையாற்றியுள்ளார். அவரது சேவை சமூகத்தின் எல்லா மட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டமை மகிழ்வைத் தருகின்றது. அவரது ஆளுமையையும் ஆற்றலையும் நாம் நன்கு பயன்படுத்தியுள்ளோம். வறுமைக் கோட்டிலுள்ளவர்களுக்காக அவர் ஆற்றிவரும் சேவை தொடரவேண்டுமென அவரிடம் விண்ணப்பிக்கின்றேன். அவரைப்போன்ற ஒருவர் எங்களுடன் பணியாற்றுவது பெருமையைத் தருகின்றது. தன்னைப் போன்றவர்களை உருவாக்க வேண்டியது எங்கள் சமூகத்திற்கு அவர் ஆற்றவேண்டிய உயரிய பணியெனக் கருதுகின்றேன்.

தனது பாடசாலை மாணவர்களுக்கு அதிபராக மாத்திரமன்றி ஓர் அன்புத்தாயாகவே விளங்கினார். அவரது வழிகாட்டலால் அங்கு பணியாற்றும் ஆசிரியர்கள் அவரைப் போலவே பிள்ளைகளிடம் அன்பும், அக்கறையும், ஆதரவும் கொண்டவர்களாக விளங்குகின்றனர். அவரது சேவைக்கு கல்வித்திணைக்களம் கடமைப்பட்டுள்ளது.

அவர் நேரான மாற்றங்களை ஏற்படுத்தக்கூடிய வல்லமை உள்ளவர் என்பதனை நான் நன்கறிவேன். அவர் இளைப்பாறுவது மனதை நெருடினாலும் அவரது சேவை தொடர்ந்தும் எங்களுக்கு கிடைக்கும் என்ற நம்பிக்கை உண்டு. அவர் மாற்றத்தின் முகவராக ஓயாமல் பணியாற்ற வேண்டும் என வினயமாக வேண்டுகின்றேன்.

இனிமேல் அவரது சேவை சமூகத்தின் எல்லாத் தரப்பினருக்கும் அதிகமாகக் கிடைக்கும் வாய்ப்புண்டு என நம்புகின்றேன். சிறந்த குடும்பத் தலைவியான உங்களுக்கு உயர்பண்பும் தகைமையும் கொண்ட கணவரும், பிள்ளைகளும் வாய்த்திருப்பது தங்கள் சேவைக்கான இறைவனின் அருட்கொடையாகும். அவரும் அவரது குடும்பத்தினரும் இறை ஆசியுடன் மென்மேலும் பிரகாசிக்க இறைவனை இறைஞ்சி வாழ்த்துகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "நிறைகுடமாய் வாழ்பவர்"

அறுபதாண்டகவை அம்பாளுக்கென்று
அறிந்ததும் அதிர்ந்துபோய் நின்றேன்
நிறைகுடம் என்ன நின்று வாழ்ந்திட்ட
நேர்த்தியை நினைந்துளம் மகிழ்ந்தேன்
உறுபொருள் கல்வி உயர்குணம் பக்தி
உலகினோர் உவப்புறும் வாழ்வு
பெறுமதி மிக்க அறுபதாண்டுகள் நீ
பெற்றதனை இன்னும் பெறுக நீ நூறு

**வாழ்த்துரை**

அம்பாளுக்கும் அறுபதாயிற்றா? ஆச்சரியமாக இருக்கிறது. என்றும் உள்ளத்தால் இளமையாக இருப்பவர். அறிவால், ஆற்றலால், ஆளுமையால் அம்பாள் முதிர்ந்தவர் என்பதை அறிவோம். அமரர்களான ஆறுமுகம் சரஸ்வதி அவர்களின் வழிபாட்டு வலிமையால் குககுமாரி அம்பாள் ஆனார்.

அமரர் சரஸ்வதி ஆசிரியையின் அன்பாளுமை எல்லைக்குள் அடியேனும் ஒருவன். அதனாலே அடிக்கடி அவர்களின் வீட்டுக்குச் செல்வேன். பெரும்பாலும் ஞாயிற்றுக்கிழமை பின்னேரச் சிற்றுண்டியும் நெஸ்க்கோப்பியும் அம்பாள் வீட்டிலேதான். (நெஸ்கோப்பி தயாரிப்பதில் கேதீஸ்வரி கைதேர்ந்தவர் என்பதை அங்கே கோப்பி அருந்திய அனைவரும் அறிவர்.

நல்ல குடும்பம் தெய்வீகம் என்பதற்குச் சான்று அம்பாள் அவர்களின் குடும்பம்தான். அமரர்களான ஆறுமுகம் ஆசிரியர், சரஸ்வதி ஆசிரியை அவர்களது புண்ணியத்தின் பொலிவினை அவர்களது இல்லத்திலே காணலாம்.
குடும்ப உறவுகள் விரிந்து, பரந்து, பிரிந்துவாழும் இக்கால கட்டத்திலே ஒரே குடும்பமாக, கூட்டுக் குடும்பமாக ஒற்றுமையுடன் வாழும் உன்னதமான பண்பினை இவர்கள் வீட்டிலே தான் காணலாம்.
அமரர் ஆறுமுகம் தம்பதியினரின் பிள்ளைகள் எல்லோரும் பண்புடையவர்கள். நற்குண நற்செய்கைகள் நிரம்பியவர்கள். நட்பு, தயை, கொடை இவர்களுடன் கூடப்பிறந்தவை. இரத்தத்திற்கலந்தவை. சைவவாழ்வைச் சிக்கனப் பிடித்தொழுகுபவர்கள்.

பெரியோரைப் பேணுதல், மற்றவர்களின் மனம் நோகப் பேசாத பண்பு, போகவிட்டுப் புறங்கூறாத வாழ்வியல் முதலான நல்ல இயல்புகள் இவர்களின் குடும்பச்சொத்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் ஆறுமுகம் தம்பதியினரின் மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் அனைவரிடமும் முற்கூறிய நற்பண்புகள் நிரம்பி இருப்பதை அந்தக் குடும்பத்தோடு பழகிய அனைவரும் அறிவர்.
அம்பாள் ஆசிரியையாக, அதிபராக, கல்வி ஆலோசகராகப் படிப்படிப்படியாகப் பதவியில் உயர்ந்தவர். இவரால் அதிபர் பதவி பெருமை பெற்றது.
அம்பாளின் கணவர் கணக்காளர் திரு.விஜரகுநாதன் மானுடம் பேணும் மாண்பினர், நல்ல பண்பாளர், நிறைந்த பக்திமான் அம்பாளின் மகள், மருமகள், மகன்மார் எல்லோரும் இனியவர்கள், நல்லவர்கள், இறைவனின் பூரண கிருபாகடாட்சம் பெற்றவர்கள்.

திருமதி. விஜயரகுநாதன் ஓய்வுக்காலத்திலே சமய, சமூக, தமிழ், கல்விப்பணிகளில் உற்சாகத்துடன் ஈடுபடவேண்டும் என்று எல்லாம் வல்ல நல்லூர் முருகன் திருவடிகளை வணங்குகிறேன்.

குறிப்பாகத் திருமதி. குககுமாரி விஜயரகுநாதனுக்கு ஒரு பணிவான வேண்டுகோளை முன்வைத்து என் வாழ்த்துரையை நிறைவு செய்ய விரும்புகிறேன்.
இன்று யாழ்ப்பாணத்திலே பெண்பேச்சாளர்கள் மிக அருந்தலாகவே உள்ளனர். உங்களுடைய பேச்சுவன்மையை நாம் நன்கு அறிவோம். ஓய்வு காலத்திலே சமய, இலக்கியச் சொற்பொழிவுகளை உங்கள் பிரதான போக்காகக் கொள்ள வேண்டும்.
நல்லன எல்லாம் தரும் அம்பாள், அம்பாளுக்கு நல்லன எல்லாம் தந்து மகிழ்ச்சியுடன் வாழவைப்பாள்.

**வாழ்த்துக்களுடன்,**
**பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா,**
**மேனாள் தமிழ்த்துறைத் தலைவர்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நல்லவை எண்ண வேண்டும், எண்ணிய முடிதல் வேண்டும், திண்ணிய உள்ளம் வேண்டும், தெளிந்த நல்லுறுதி வேண்டும்." என்பவற்றை மனதில் இருத்தி வாழ்ந்து வருபவரிற்கு மணி விழா வாழ்த்துரை வழங்குவதில் பெருமையடைகின்றேன். சிறந்த ஆன்மிகப் பின்புலத்தைக் கொண்ட இவர் தனது வாழ்க்கையிலும் சைவநெறி தவறாது தனது சகோதரர்கள் போல் எளிமையாகவும், மிகவும் பின் தங்கியவர்களுக்கு உதவி செய்வதும், அன்புடனும் இன்முகத்துடனும் சகலரையும் வரவேற்று உபசரிக்கும் பண்பும், நல்ல விழுமியக் கருத்துக்களை ஏனையோருக்கு வழங்கும் தன்மையும், எல்லோரையும் கவரக்கூடிய சிறந்த பேச்சாளராகவும், சிறந்த அதிபராகவும், ஏனையோருக்கு முன்மாதிரியாகவும்,செயற்பட்டு வருகின்றார் என்றால் மிகையாகாது.

இவர் எமது யாழ்ப்பாண தேசிய கல்வியியற் கல்லூரி மாணவர்களை கற்பித்தல் பயிற்சிக் காலத்தில் நேர்த்தியான முறையில் வழிநடத்தியதோடு மாத்திரம் அல்லாமல் நாம் கல்லூரிக்கு நற்சிந்தனை வழங்க அழைத்தபோது மனம் கோணாது வேலைப்பளுவின் மத்தியிலும் வந்து எமது மாணவர்களை உற்சாகப்படுத்தி நல்ல ஒழுக்க விழுமியக் கருத்துக்களை வழங்கிச் சென்ற பெருமைக்குரியவர்.

அது மாத்திரம் அல்லாது' இவர் மற்றும் இவரது சகோதரர்களோடு சம காலத்தில் இராமநாதன் கல்லூரியில் எனது துணைவியாரும் கற்றதால், இவர்களது நற்பண்புகளை எனக்கும் பிள்ளைகளுக்கும் அடிக்கடி கூறுவார்.

மேலும் தான் கற்ற இராமநாதன் கல்லூரியில் சேவை செய்ய வேண்டும் என்ற மனப்பாங்கில் ஆசிரிய பணியில் இணைந்தது அவரின் நற்குணத்தை எடுத்துக் காட்டுகின்றது. இவ்வாறானவர்களிடம் எனது மூத்த மகன் ஆரம்பக் கல்வியைக் கற்று நல்ல அத்திவாரத்தை இட்டபடியால் அவர் இன்று நல்ல நிலையில் இருப்பதையிட்டு நன்றி கூறுகின்றேன். ஊரார் பிள்ளைகளை இவ்வாறு ஊட்டி வளர்த்ததன் காரணமாக அவரது பிள்ளைகள் சிறப்பாக வளர்ந்து இன்று பல்வேறு துறைகளில் சிறந்த கல்விமான்களாக திகழ்வது அவரது சேவைக்கு கிடைத்த வெற்றியாகும்.

அவர் எந்த நேரத்திலும் சிரித்த முகத்துடனும் நிதானத்துடனும் சமூகப் பொறுப்பு உணர்வுடனும் எமது சமூக கலாசார சமய விழுமியங்களைப் பாதுகாக்கும் கொள்கையுடனும் தனது அர்ப்பணிப்பான சேவையை ஆற்றியிருப்பது போற்றத்தக்க தாகும். இவர் நான் யாழ் பல்கலைக்கழகத்தில் கற்கும் காலத்தில் கற்று ஒரே காலத்தில் ஆசிரியர் ஆகி இன்று பல பட்டங்களைப் பெற்று முன் உதாரணமாக இருப்பதோடு, தான் கற்றதனை திறந்த பல்கலைக்கழகம், தேசிய கல்வி நிறுவகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற கல்வி நிறுவனங்களில் பிரயோகித்து வருவதும் சமூகம் போற்றும் சிறந்த அதிபராக விளங்குவதும் மிகவும் பாராட்டுக்குரியது.

திருமதி. குககுமாரி விஜயரகுநாதன் அவர்கள் தனது ஓய்வுக்காலத்திலும் அவர் தம் குடும்பத்தாருடன் நீண்டகாலம் நலமாக வாழ்ந்து மேலும் இவ்வுலகிற்கும் சமூகத்திற்கும் பணியாற்றும் வல்லமையை வழங்கவேண்டுமென எல்லாம் வல்ல வித்தக விநாயகரின் திருப்பாதங்களில் பணிந்து நிற்கின்றேன்.

**திரு. சதாசிவம் அமிர்தலிங்கம்**

**பீடாதிபதி,**

**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புத்துயிரளித்தவர் வாழ்த்துச் செய்தி

யா/நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலய அதிபர் திருமதி. குககுமாரி விஜயரகுநாதன் அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பேருவகை அடைகின்றேன்.

கல்விப்பணி, இறைபணி, சமூகப்பணி என பல்வேறு பணிகளை தம் உயிரினும் மேலாக கருதிச் செயற்பட்டவர் இவர். அன்பு, அடக்கம், புன்முறுவல் பூத்த முகமலர்ச்சி எந்நேரமும் மாறாத பல சீரிய பண்புகளை தன்னகத்தே கொண்டு அதிபர் சேவையை அகமகிழ்வுடன் அலங்கரித்து உன்னத சேவையாற்றிய இவர் நட்புக்கு இலக்கணமாகவும் அமைந்தவர்.

கூட்டுக்குடும்ப வாழ்க்கை என்னும் மரபுசார் வாழ்க்கை முறையை தமதாக்கி பெற்றோரின் கனவுகளை நனவாக்கி சீரிய வாழ்வு வாழ்பவர்கள் இவரும் இவரது குடும்பத்தினரும் ஆவர். இவர்களின் வாழ்க்கை முறை இன்றுள்ள தலைமுறைக்கு ஓர் உன்னத எடுத்துக்காட்டாக திகழ்கின்றது.

யா/இராமநாதன் பெண்கள் கல்லூரியிலே கல்வி கற்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலே பட்டங்கள் பலவற்றை பெற்று ஆசிரியப் பணியை சேவை மனப்பாங்குடன் ஆற்றி அதன் சிறப்பினால் அதிபர் பதவியை பெற்ற பெருந்தகை இவர்.

நான் இப்பாடசாலையில் அதிபராக இருந்த காலத்தில் என்னோடு பணியாற்றிய பல ஆசிரியர்களும் மாணவர்களும் எனது இடமாற்றத்தினால் மனரீதியாக சோர்ந்திருந்த வேளையிலே இப்பாடசாலையின் அதிபர் பதவியை ஏற்று அவர்களுக்கு வலுவூட்டி புத்துயிரளித்து பாடசாலையை மேம்பாடடையச் செய்தவர்.

காலத்தின் கட்டளையால் ஓய்வு பெறும் நீங்கள் ஓய்வுக்காலத்தில் சீரும் சிறப்புடனும் வாழ்வதோடு, உங்கள் பணிகள் தொடர எனது நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திருமதி.மிமலாதேவி விமலநாதன்**

**அதிபர், யா/இந்து மகளிர் கல்லூரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலய ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் வழங்கிய வாழ்த்துச் செய்தி.

## *மணிவிழா நாயகியை மனம் மகிழ வாழ்த்துகின்றோம்.*

யாழ் நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் எட்டு வருடங்கள் முதல்வராக சேவை செய்து தனது அறுபதாவது அகவை நிறைவை எம்முடன் கொண்டாடும் மணிவிழா நாயகி திருமதி.குககுமாரி விஜயரகுநாதன் அவர்களை மனம் மகிழ வாழ்த்துவதுடன், அன்னாரது சேவையைப் போற்றி வெளியிடும் "குக ஒளி" மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றோம்.

முத்தமிழும் சைவமும் செழித்து வளரும் இறையருள் நிறைந்த வடபுலத்தில் இணுவையம்பதியில் மருதனார் மடத்தில் ஆசிரியப் பணியில் தம்மை முழுமையாக அர்ப்பணித்து நிறைவுகண்ட திரு.திருமதி.ஆறுமுகம் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியாகப் பிறந்தவர். பெற்றோரால் "அம்பாள்" என அழைக்கப்பட்ட திருமதி. குககுமாரி விஜயரகுநாதன் அவர்கள் தனது ஆரம்பக்கல்வி முதல் பல்கலைக்கழகம் வரை யாழ் இராமநாதன் பெண்கள் கல்லூரியில் கற்றதுடன் இணைபாடவிதமான செயற்பாட்டின் மூலம் தன்னை வளப்படுத்தி ஒரு சிறந்த மாணவியாக விளங்கி அப்பாடசாலைக்கு நற்பெயரைப் பெற்றுக்கொடுத்தவர்.

1984ஆம் ஆண்டு கலைப்பட்டதாரியாக ஆசிரியப் பணியில் காலடி வைத்தவர். ஆசிரியப்பணியை சிறப்பாக செயற்படுத்தும் நோக்குடன் ஒரு சிறந்த கல்வியாளராக வரவேண்டும் என்ற இலட்சியத்தினால் M.Ed, M.Phil. in. Edu எனும் பட்டங்களையும் பெற்றுக்கொண்ட விழா நாயகி அதிபர் பரீட்சையிலும் சித்தியடைந்திருந்தார். அதன்பயனாக இறைகட்டளையென ஏற்று 2010.06.23ஆம் திகதி ஸ்ரீ கற்பக விநாயகரின் பாதம் பணிந்து எமது வித்தியாலயத்தின் முதல்வராக மனவிருப்புடன் ஏற்றுக்கொண்டவர் என பெருமையுடன் கூறுவதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

புதியதோர் சூழலில் தனது கடமையை ஆரம்பித்த திருமதி. குககுமாரி விஜயரகுநாதன் பல்பரிமாணங்களில் நோக்கத்தக்கவர். அதிபர் ஒரு முதல்நிலை முகாமையாளராக, ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், சுற்றம் சூழல் மற்றும் பழைய மாணவர்கள் போன்ற பன்முகங்களைக் கொண்ட சமூகத்தினை வழிநடத்தி ஒன்றிணைத்த பெருமைக்குரியவர் எனக்கூறுவதில் அகமகிழ்வு கொள்கின்றோம்.

நாங்கள் அவருடன் ஒன்றிணைந்து பணியாற்றியவர்கள் என்ற வகையில் அவரது செயற்திறனை எடுத்துக் கூறவேண்டிய தலையாய பணி எமக்குள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்அறங்கள் யாவினும் புண்ணியம் கோடி....**"என்னும் பெரும் இலட்சியத்தை இலக்காகக்கொண்டு தனது பணியை ஆரம்பித்து அதற்காக பல பணிகளைத் திட்டமிட்டு செயற்படுத்தி வெற்றி கண்டவர் எம் முதல்வர் எனக் கூறுவதில் பெருமையடைகின்றோம்.

அன்பு, அடக்கம், பணிவு, நேர்மை, மூத்தோரை மதித்தல் ஆகிய நற்பண்புகளை தன்னகத்தேகொண்ட எம் சகோதரி அம்பாள் தன்னுடைய ஆளுமைத் தன்மையினாலும், புன்சிரிப்பாலும், கனிவான உரையாடல் பாங்கினாலும் எல்லோரது உள்ளங்களிலும் என்றும் நிலைத்து நிற்கக் கூடியவராக செயற்பட்டுள்ளார்.

இடம் பெயர்ந்து கல்வியைத் தொடர வாய்ப்பில்லாது இருந்த பல மாணவர்களை எமது வித்தியாலயத்தில் இணைத்து கல்வி கற்கும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தியதுடன் அவர்களது உடல் உள தேவைகளையும் பூர்த்தி செய்து சமூகத்தில் நற்பிரஜைகளாக வாழ வழிகாட்டிய பெருமைக்குரியவர்.

ஆசிரியர்கள், மாணவர்கள் நலன்கருதி பௌதிக வளங்களை புதிதாக ஏற்படுத்தி யும் புனரமைப்புச் செய்தும் கற்றலுக்கு ஏற்ப மகிழ்ச்சிகரமான களமாக ஏற்படுத்தியதுடன் கற்றல் உபகரணங்களையும் வழங்கி கற்றல் கற்பித்தலை இலகுபடுத்தியதுடன் இணைபாட செயற்பாட்டின் மூலம் கலையார்வத்தை மாணவர்களுக்கு ஏற்படுத்துவதற்கு முன்னின்று உழைத்தவர், பான்ட் வாத்தி யத்திற்கு மாணவர்களை தெரிவு செய்து பயிற்சி வழங்கி இல்ல மெய்வன்மை திறனாய்வு நிகழ்வில் நடைமுறைப் படுத்திய பெருமைக்குரியவர்.

தன்னுடைய சேவைக் காலத்தில் சைவசமயப் பண்புகளைப் பேணும் நோக்கில் சமய விழாக்களைச் சிறப்பாக நடைமுறைப்படுத்தி மாணவர்களை சமய ரீதியான போட்டிகளுக்கு தயார்ப்படுத்தி அனுப்புவதோடு மாணவர்களுக்கு பல புராணக் கதைகளை சொற்பொழிவுகளாக நிகழ்த்தி விழுமியப் பண்புகளை வளர்த்த பெருமைக்குரியவர். பாடசாலை முன்றலிலே சரஸ்வதி சிலையொன்றினை நிறுவ எண்ணி தொண்டுநாதசுவாமிகளின் மூலம் அச்சிலையை திறந்து வைத்து வெற்றிகரமாக தனது செயற்பாட்டை நிறைவேற்றியமை போற்றுவதற்குரிய விடயமாகும்.

தன்னுடைய சேவைக்காலத்தில் க.பொ.த.சாதாரணதரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களை யாழ் இந்துக் கல்லூரி, யாழ் வேம்படி மகளிர் கல்லூரி, யாழ் இந்து மகளிர் கல்லூரிகளில் கல்வி பயிலும் வாய்ப்பை பெற்றுக் கொடுத்ததுடன் இக்கல்லூரிகளில் கல்வி கற்ற இரு மாணவிகள் பல்கலைக்கழகம் சென்று கல்வியைத் தொடரும் இவ்வேளையில் அவர்களது குடும்ப நிலை அறிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விக்கு உதவும் புலம்பெயர் அன்பர் ஒருவர் மூலம் மாதம் மாதம் நிதி கிடைக்கக்கூடிய உதவியினையும் பெற்றுக் கொடுத்துள்ளமை பாராட்டுக்குரியதாகும்.

அது மட்டுமல்ல எமது வித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணர்களது பெற்றோரின் நிலை அறிந்து சீருடை, காலணி, புத்தகப்பை, அப்பியாசக் கொப்பிகள் என்பவற்றை தனிநபரிடமும் நிறுவனங்கள் மூலமும் பெற்று வழங்கியமையினால் பெற்றோர் மனதில் நீங்கா இடம் பிடித்துள்ளமை யாவரும் அறிந்த உண்மையாகும். தன்னுடைய பணியினைச் சிறப்பாக நடாத்துவதற்கு ஆசிரியர் குழாத்துடனும் அலுவலகப் பணியாளரிடமும் சகோதரியாகவும், நண்பியாகவும், ஆசிரியராகவும், உளவள ஆலோசகராகவும், வழிகாட்டியாகவும் செயற்பட்டமை யினால் திருமதி. குககுமாரி விஜயரகுநாதன் எல்லோர் உள்ளங்களிலும் தனக்கென ஒரு தனி இடம் பிடித்துள்ளார் எனக் கூறி வாழ்த்துகின்றோம்.

இவரது கல்விப் பணி சிறப்பாக அமைய அவரது கணவர் திருவாளர் முத்துக்குமாரு விஜயரகுநாதன் (கணக்காளர்) அவர்களது பூரண ஒத்துழைப்பும் அனுசரணையும் காரணம் எனக் கூறிக்கொள்வதுடன், அமரத்துவம் அடைந்த அவரது அன்னை சரஸ்வதி அம்மாவின் வழிகாட்டல் நேரமுகாமைத்துவம், கடமையின் கட்டாயம், எந்நேரமும் பாடசாலைச் சிந்தனையுடன் மகளை வழி நடத்திய அன்னையின் பணியை கரம் கூப்பி சிரம் தாழ்த்தி வணங்குவதுடன் யாழ் நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயம் என்றென்றும் நன்றியுடையதாக இருக்கும் எனக் கூறிக் கொள்கின்றோம்.

தன்னலம் அற்ற அவர் தம் பணியினால் அவர்தம் பிள்ளைகளும் மானிட வாழ்வின் நிலையான செல்வமான கல்விச் செல்வத்தைப் பெற்றவர்களாகவும் சீருடனும் சிறப்புடனும் வாழ்வதை நாம் மனமகிழ்வோடு வாழ்த்துகின்றோம்.

மேலும் மனநிறைவோடு தனது சேவையில் இருந்து ஓய்வு பெற்றுச் செல்லும் மணிவிழா நாயகியை அவர்தம் கணவர், பிள்ளைச் செல்வங்கள், மருமகன் மற்றும் சகோதர சகோதரிகள் அனைவருடனும் எல்லா நலன்களும் பெற்று நீடுழி வாழ்க வாழ்கவென வாழ்த்தி நிற்கின்றோம்.

திருமதி.நிர்மலா பஞ்சலிங்கம்
ஓய்வு நிலை உப அதிபர் B.A, Dip.in.Edu.
திருமதி.சிவமணி இரகுநாதன்
ஓய்வு நிலை சிரேஷ்ட ஆசிரியர் Trained (H.E)
திருமதி.வாசுகி பரமநாயகம்
ஓய்வு நிலை சிரேஷ்ட ஆசிரியர் Trained (Science)
திருமதி.அமரசோதி மகேந்திரராசா
ஓய்வு நிலை உப அதிபர்.B.A, Dip.in.Edu



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துப் பா

## கலாநிதி செ.திருநாவுக்கரசு

நல்லா சிரியை; நயமிகு அதிபரெனப்
பல்லோ ரேத்தும் பணிசெய்த – வல்லமை சேர்
குககுமாரி விஜயரகுநாதனவர் குடும்பத்துடன்
இகமதிலே வாழ்கபல் லாண்டு.

அகவை யறுபதில் அதிபர்பணி நிறைவுகண்ட
தகவருந் தாயான தமிழமுதே! – நிகரின்றி
வளமெலாம் பெற்று வாழ்க்கை எழில்துலங்க
நிலமதில் வாழ்க நூ றாண்டு

கல்வியால் மிளிர்நது, கடுமுழைப்பா லுயர்ந்து
நல்லதொரு கணக்காளரை மணந்து - இல்லறத்தில்
பெண்ணுடன் ஆணிருவ ரெனப்பிள்ளைப் பேறுற்று
தண்ணார் தமிழ்ப்பணிசெய் தாய்வாழ்க இனிது

பேச்சில், எழுத்தில், பேணுமிறை பக்தியில்
மூச்சாய்க் கொள்கல்வி பயிற்றலில் - வீச்சுமிகும்
நல்லூர் விக்னேஸ்வர வித்யாலய அதிபருக்கு
நல்லூரா நலமென்றும் அருள்

தொன்மைசீர் பரவுகின்ற தூயதமிழ்ச் சைவநெறி
துலங்கும் கோப்பாய் மண்ணில்
நன்மையெலாந் திரண்டுதித்த நல்லாசான் ஆறுமுகம்
நல்லறமாம் இல்லறத்தின் துணைவி கொடைத்
தன்மையிலே மேன்மைபெறும் இணுவிற்பதி ஆசிரியை
தயாளகுணச் சரஸ்வதியோ டிணைந்து பெற்ற
பொன்னலஞ்சேர் புத்திரர்கள் மூவர்; பெண்கள்
புகழ்பூத்த நால்வருள்ளே மூத்தவர் அம்பாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணன்மார் இருவருக்கு அடுத்துப் பிறந்தார்
"அம்பாள்" எனச் செல்லப்பெயர் கொண்டார்
எண்ணிய கல்வி பெற இராமநாதன் கல்லூரி
எடுத்தடி வைத்தவர் ஏற்றமுடன்
துன்னிய பதின்மூன்றாண்டுகள் கற்றார்
தொடர்ந்து பல்கலை சென்றார்
நன்னயமாய்ப் பொருளியலில் சிறப்புப் பட்டம்;
நல்லாசிரியர்க் குரிய பணியேற்றார்.

கலைப்பட்ட தாரி ;கல்வி டிப்ளோமாவுடன்
கல்வி முதுமாணி ; கல்வியியல்
கலைப்பட்ட முது தத்துவ மாணியெனத் தகுதி பெற்ற
தாளாண்மை, பணிவுள்ள ஆசிரியம்;
நிலைப்பட்ட தொலைக்கல்விப் போதனா சிரியை;
நிலைமாறி இலங்கைத் திறந்த பல்கலையில்
கலைத்திட்டம் அமுலாக்கும் முதன்மை யாசிரியை;
கல்வியியல் வருகைவிரிவுரையாளர்

எட்டாண்டு காலம் திறந்த பல்கலையில்
முன்பள்ளி இணைப்பாளர்; அங்கே
பட்டப்பின் கல்வி விரிவுரையாளர்; பரந்தபணியில்
பாடசாலை அதிபருமானார்
இட்டமுடன் நல்லூர் ஸ்ரீவிக்னேஸ் வராவில்
ஏழாண்டுகள் இனியபணி கண்டார்
தொட்ட தெல்லாம் துலங்கச்செய் அதிபரென்றும்
தொல்லுலகில் நீடுழி வாழியவே!

கல்முனை பாத்திமாவில் கற்பித்தல் தொடங்கிக்
கற்றுயர்ந்த இராமநாதன் கல்லூரி
நல்கு வயல்சூழ் வவுனியா ம.வி,
நல்லூர் மங்கையற் கரசியென
எல்லையிலாய் பெருந்தவமாம் கல்வி இயற்றி
இருபத்தைந் தாண்டுகள் நிறைவுகண்டு
ஒல்லும் ஓரெட்டு ஆண்டுகள் அதிபர்பணி
உயர்ந்தார் தரமிரண்டில் உவப்புடனே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றவர் மனம்போல பிரியமுள்ள ஊரவராய்
பெருமை பெறு கணக்காளர் பதவியினர்
உற்றவர் விஜயரகு நாதனை மணஞ்செய்து
உயர்வான இல்லறத்தை நல்லறமாய்ச்
சற்றேனும் விலகாமல் சந்ததிகள் மூவருடன்
சந்தனமாய்ச் சண்பகமாய் மணம் வீச
நற்றாயாய்ப் பணிசெய்து, நல்லூரை வழிபட்டு
நன்மை பல கண்ட மனம் வாழியவே!

பெற்றவரும் ஆசிரியர்; பிரியமுள சகோதரமாய்ப்
பிறந்தோர்களனைவரும் ஆசிரியர்;
உற்றமூன்று பிள்ளைகளிலிருவர் ஆசிரியர்;
உவந்துபெற்ற மருமகனார் மருத்துவர்

கற்றவர்கள் நிறைந்து களிப்பூட்டும் ஆசிரியம்
கனிவுபெற்ற கவின்கோவில் குடும்பமதாய்
நற்றவத்தின் பேறதுவாய் நாடிவரும் உறவெல்லாம்
நன்மனமாய்க் கலந்தே மிஞ்சும்

அற்புதமாம் கூட்டுறவில் அமைந்த இல்லம்
அம்பாளின் ஆச்சிகண்ட அன்னையில்லம்
பொற்பதமாய் எந்நாளும் பொலியும் வண்ணம்
புனிதமுடன் மனிதமங்கே பூத்திருக்கும்
சொற்றிம்பாச் செயல்களினால் சூழ்ந்த வாழ்வின்
சுகமெல்லாம் ஒழுங்குபெற்றுக் குகவொளியாய்க்
கற்பகமாய்க் காசினியில் காலம் முழுதும்
களிப்புடனே வாழ்ந்திடுக கடவுளருளால்

ஓய்வு நிலை விரிவுரையாளர்,
ஆசிரியர் கலாசாலை
கோப்பாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யா/நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயம் மணிவிழா நாயகிக்கு என் அன்பான வாழ்த்துக்கள்.

அன்னசத்திரம் ஆயிரம் அமைத்தல் ஆலயம் பதினாயிரம் கட்டுதல் என்பதற்கு மேலாக ஏழைகளுக்கு எழுத்தறிவித்தல் புண்ணியம் கோடி என்ற வார்த்தைக்கு இணங்க இப்பாடசாலையில் சிறப்பான முறையில் தனது முத்திரையைப் பதித்துச் செல்கிறார் முதல்வர் திருமதி.குககுமாரி விஜயரகுநாதன் அவர்கள்.

பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் கல்வி கற்று வந்த கல்லூரியும் அவரவர் வாழ்வில் என்றுமே இணையற்ற பொக்கிஷங்கள். அந்த வகையில் இப்பாடசாலையின் ஆசிரியராகவும் பணிபுரியும் வாய்ப்பு கற்பக விநாயகர் அருளால் எனக்குக்கிடைத்த தென்றே குறிப்பிடலாம்.

முதல்வர் அவர்களின் காலத்தில் இப்பாடசாலையில் இருந்து பணிபுரிந்து ஓய்வு பெற்றுச் சென்ற நான் அவர்களின் பணிகள், சிறப்புக்கள் பற்றி சில வார்த்தைகள் கூற விழைகின்றேன்.

நிமிர்ந்த நன்நடை, நேர்கொண்ட பார்வை, நிமிர்ந்த ஞானச் செருக்குக் கொண்டவர். கருணை உள்ளம், கனிவான பேச்சு, இறை நம்பிக்கை, இன்முகத்துடன் வரவேற்கும் பண்பு என்பன அவரது பெற்றோர்களால் அவருக்குக் கிடைத்த பரிசு. எண்ணிய பணிகளைத் திண்ணியமாக முடிக்க வல்லவர் அவரது பணிகள் சிறப்பாகச் செய்ய உந்துதலாக இருந்தவர். அவர்தம் துணையும், செல்வங்களும், உற்ற சகோதரர்களும் என்றே கூறலாம்.

இப் பாடசாலையில் பௌதிக வளங்களை பெருக்குவதிலும் மாணவர்களின் உளநல வளர்ச்சியிலும், கல்வி வளர்ச்சியிலும் முன்னின்று உழைத்து இன்று ஓய்வு பெறும் மணிவிழா நாயகி நீண்ட ஆயுளுடனும், சகல சௌபாக்கியங்களும் பெற்று உற்ற துணைவர் திரு.மு.விஜயரகுநாதன் அவர்கள் மற்றும் அவர்தம் மக்கள், மருமக்கள், உறவுகள் அனைவருடனும் மாண்புற வாழ கற்பக விநாயகர் அருளை வேண்டி நிற்கின்றேன்.

திருமதி. சிவமணி இரகுநாதன்
பழைய மாணவி
ஓய்வு நிலை ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் அதிபர்

அன்புடனே எமை அணைத்து
பண்புடனே அறிவுரை கூறி
பொன்னான கல்விதனை
கருத்துடனே புரிய வைத்த
அன்பான தெய்வம் எங்கள் அதிபர்

பட்டாம் பூச்சி போல்
பள்ளியை சுற்றி வந்து
சின்னஞ் சிறார் எமை
நித்தமும் காண வந்து
பாங்குடனே சேவைதனை நிறைவேற்றிய எம் அதிபர்

காலமெல்லாம் நினைத்திருப்போம்
உம் பணியினை நாம் வாழ்த்திடுவோம்
வாழ்க என்றும் எம் தாயே
வளமுடனே வாழ்கவே!

ஆரம்பப் பிரிவு மாணவர்கள்
யா/நல்லூர் தெற்கு ஸ்ரீ
விக்னேஸ்வரா வித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நினைவலைகள் ............

இன்று அகவை அறுபதை எய்தி மணிவிழாக் காணும் மணிவிழா நாயகி திருமதி.குககுமாரி – விஜயரகுநாதன் அவர்களின் நினைவிற் சில நிமிடங்கள்..........

ஈழமணித் திருநாட்டின் தலையாக விளங்கும் யாழ்ப்பாணத்தில், சைவம், தமிழ், பண்பாடு என்பன ஒருங்கே பின்னிப் பிணைந்து வாழ்வோடு இணைந்த இணுவையூரில், மருதனார் மடத்தில் ஆதி சைவ மரபில் உயர்குடியில் திரு.திருமதி. ஆறுமுகம் சரஸ்வதி தம்பதிகளுக்கு செல்வப் புதல்வியாக, ஆயிரத்துத் தொள்ளாயிரத்து ஐம்பத்தேழில் கருமுகில்சூழ்ந்திடும் கார்த்திகைத் திங்கள் ஒன்பதாம் நாள் மங்கலம் தங்கிடும் வேளை மகளாக அவதரித்தார்.

அழகிய வதனமும், அருள் மிகு கண்ணும் உடைய அவரை பெற்றோராலும் உற்றாராலும் அம்பிகையே தமக்குத் குழந்தையாகப் பிறந்துள்ளார் என எண்ணி அம்பாள் என ஆசையாக அழைக்கப்பட்டார். எமது கல்லூரியின் முதல்வர் திருமதி.குககுமாரி விஜயரகுநாதன் அவர்கள்.

சைவப் பண்பாடும் தமிழ்ப்பண்பாடும் ஒருங்கே புகட்டி வழிகாட்டும் யாஃஇராமநாதன் கல்லூரியில் ஆரம்பக் கல்வி முதல் உயர்தரம் வரை கல்வி கற்று அப்பாடசாலைக்குப் பெருமை சேர்த்தவர் எம் அம்மையார்.

கற்கக் கசடறக் கற்பவை கற்று பட்டங்கள் பல பெற்று பாரினில் சிறப்பாக வாழ்ந்து வரும் அன்னை எமது பாடசாலையில் அதிபராக 2010இல் காலடி எடுத்துவைத்தார். தலைமைத்துவப் பண்பும், நிர்வாகத் திறமையும் கொண்ட அவர். அன்று முதல் இன்று வரை சிறப்பாகச் சேவையாற்றி பாடசாலையின் வளர்ச்சிக்கு அரும்பங்காற்றியுள்ளார்.

எமது கல்லூரிக்கு வரும் ஒவ்வொரு மாணவ மணிகளினதும் சிரிப்பிலே இறைவனைக்கண்டு இன்புற்றார். அவர்கள் ஒவ்வொருவரின் உயர்ச்சியிலும் பாதுகாப்பிலும் எப்பொழுதும் கண்ணும் கருத்துமாக இருந்து அவர்கள் நல்லவர்களாகவும் வல்லவர்களாகவும் வாழ வழிகாட்டினார். அதுமட்டுமல்ல ஒவ்வொரு குழந்தையின் குடும்பப் பின்னணிகளையும் தெளிவாகப் புரிந்து கொண்டு ஒவ்வொரு ஆசிரியருக்கும் ஏணியாகவும், தோணியாகவும் இருந்து வழிகாட்டி அவர்களை நல்வழிப்படுத்த வேண்டும் என்ற உயர்ந்த உள்ளம் படைத்தவர் எம் முதல்வர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது பாடசாலையின் தலை சிறந்த முகாமையாளராகத் திகழ்ந்தவர் எமது அதிபர் அவர்கள். சிறந்த நிர்வாகத் திறமை கொண்ட அவர், தனது ஆசிரியர் ஒவ்வொருவரையும் உயர்விலும், நலனிலும் மிகுந்த அக்கறை கொண்டு ஒவ்வொருவரையும் தம் குடும்ப உறுப்பினரைப் போல் அக்கறை காட்டி அவர்களுக்கு ஒரு தூண் போல் விளங்கினார். அதுபோல் தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட மாணவச் செல்வங்களுக்காகத் தன்னை அர்ப்பணித்து, அவர்களின் நல்வாழ்விற்கு மிகவும் பலமான அத்திவாரத்தினை இட்டதனால் இன்று எத்தனையோ மாணவச் செல்வங்கள் உயர் நிலையை அடைந்துள்ளனர்.

அவர் தம் சீரிய சிந்தனையாலும் செயற்றிறனாலும் பெருமை பெற்று கல்வி அதிகாரிகளினதும் பெற்றோர்களினதும், பழைய மாணவர்களினதும் மனங்களில் அச்சாணி போல் பதிந்துள்ளார்.

அவர் ஒவ்வொரு நாள் காலைப் பிரார்த்தனையின் போதும் கூறும் ஒவ்வொரு சிந்தனையும் எம் மாணவர்களின் நடத்தையை மட்டுமல்ல எங்கள் ஒவ்வொரு ஆசிரியரினதும் நடத்தையிலும் பல மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன.

தெளிந்த அறிவு கொண்ட எம் அதிபரின் வாயில் இருந்து வரும் ஒவ்வொரு வார்த்தையும் ஆயிரம் பொன் பெறும். அவர் கூறும் சிந்தனைகள் எம் உள்ளத்தில் பல புதிய அறிவைத் தந்துள்தோடு எங்களுக்கு நல்ல பல எண்ணங்களையும் உருவாக்கியுள்ளன. நாம் எமது சேவைக்காலத்தில் இவ்வாறான ஒரு சிறந்த அதிபரின் கீழ் சேவை செய்தமையை எண்ணிப் பெருமையடைகின்றோம்.

எம்மைப் பொறுத்தமட்டில் எமக்குக் கிடைத்த பெரியதொரு வழிகாட்டியாக எம் அதிபர் திகழ்ந்தார். நாம் அவரிடம் இருந்து கற்றுக்கொண்ட பல விடயங்கள் பல வழிகளில் எமக்குக் கற்றற்பேறாகக் கிடைத்தமை. நாம் செய்த பாக்கியம்.

**நல்லார் ஒருவரைக் காண்பதுவும் நன்று**
**நல்லார் சொற்கேட்பதுவும் நன்று**
**நல்லார் குணங்கள் உரைப்பதும் நன்று**
**அவரோடு இணங்கி நடப்பதுவும் நன்று**

இது எவ்வளவு உண்மையானது என நாம் அனுபவம் மூலம் கண்டறிந்தோம்.
அன்புக்கு இலக்கணமான எம் முதல்வர் அண்ணன், தம்பி, தங்கை பாசங்களுடன் உறவுகளை விட்டுக்கொடுக்காது மேம்படுத்துபவர். பாடசாலையில் ஒரு சிறந்த அதிகாரியாகிய எம்முதல்வர் எம்முடன் சேர்ந்து சென்ற சுற்றுலாக்களை எம்மால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் மறக்க முடியாது. எம்முடன் ஒன்றாய் கூடிக்குலாவிக் குதூகலித்த அந்நாட்கள் எம் ஒவ்வொருவர் உள்ளத்திலும் இன்பத்தேனை ஊற்றுகின்றது. பேச்சில் இனிமை, கனிவாக கலகலப்பாக தன் சோர்வை வெளிக்காட்டாது எமக்கு உற்சாகம் அளிக்கும் உயர்ந்த பண்பு, ஒவ்வொரு வார்த்தையிலும் இருக்கும் அன்பு, அவர்தம் குடும்பத்திற்கே உரித்தான விருந்தோம்பல் இவையெல்லாம் நான் அவரிடம் இருந்து கண்டும், அனுபவித்தும் உளமகிழ்ந்த அந்நினைவுகளை எப்படி மறக்க முடியும்.

உயர்வான அன்பும், பண்பும், நல்லறிவும், இறைபக்தியும் உடைய கணவருடன் இல்லறமாகிய நல்லறத்தின் மூலம் நல்லறிவும், நற்பண்பும் கொண்ட நன்மக்களைப் பெற்று அவர்களுக்கு நல்லறிவு புகட்டி கற்பித்து தன் உடன் பிறப்புக்களையும் குழந்தைகளையும் அவர் தம் ஆசிரியராகவும், விரிவுரையாளராக அதிபராக ஆளாக்கி பெருமை சேர்த்துள்ள எம் முதல்வர் இன்று ஓய்வு பெற்றுச் செல்லும் போது, இன்று போல் என்றும் சிரித்த முகத்துடனும் நீண்ட ஆயுளுடனும் என்றைக்கும் குறையாத இளமையுடனும் சீருடனும் சிறப்புடனும் சலக சௌபாக்கியங்களும் பெற்று, தம் குடும்பம் செழிக்க உறவுகள் மேம்பட வாழ வேண்டும் என்று எல்லாம் வல்ல அம்பிகை நயினை நாகபூசணியை வேண்டி பல்லாண்டு வாழ்க என வாழ்த்தி நிற்கின்றேன்.

பகுதித் தலைவர்,

ஆரம்பப் பிரிவு,

திருமதி.யோ.சிவானந்தன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "எம்மை விருட்சமாக்கினீர்"

## யா/நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயம்.

**எமது முதல்வர் திருமதி.குககுமாரி விஜரகுநாதன் அவர்களை மாணவிகள் அ.அமலஜோதி க.பிரியதர்சினி ஆகியோர் வாழ்த்திச் சூட்டிய பாமாலை.**

---

அன்பின் வடிவாய் அன்னையின் தன்மையாய்
இன்னறுங் கல்வியை இனிக்கவே புகட்டி
இன்சொல் பேசியே இன்முகம் காட்டியே
தன்னிகரற்ற தனிக்கல்வி ஊட்டி

இவ்வுலகதனில் இலங்கிட வேண்டில்
பவ்வியமாக பலமுறை பயின்றிடு
ஒவ்வொரு தவறும் அவ்வப்பொழுதே
செவ்வை செய்திடில் சேர்ந்திடும் சித்தியே

என்றே எமக்கு தெம்புகளூட்டினீர்
கண்டிப்போடு கனிவும் காட்டினீர்
நன்பயன் பெற்றிட நாட்டிய பயிர் நிலம்
பண்படுத்துதல் போல் பக்குவப் படுத்தினீர்

நடையுடை பாவனை நால்வகைப் பண்பும்
தடையின்றித் தாயைப் பின்பற்றியே போற்றினோம்
படைத்துப் பயிற்றிய கல்வியும் எம்மிடை
சடைத்து வளர்ந்து விருட்சமானதே

எங்கள் ஆசான் திங்கள் ஒளியே
மங்களம் பொங்குக! உங்கள் பொழிவில்
கங்கை சூடியின் மைந்தன் கந்தன்
சிந்தை மகிழ்ந்தே வரம் தந்திடுகவே!
எல்லா நலன்களும் பல்கிப் பெருகவே!
கல்வித்தாயே மங்களம் பொங்கவே
என்றும் வளமுடன் வாழ்க வாழ்கவே!

அ.அமலஜோதி
க.பிரியதர்சினி
} பல்கலைக்கழக மாணவிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்பால் உயர்ந்து நிற்கும் மாதரசி

**நயனொடு நன்றி புரிந்த பயன் உடையார்**
**பண்பு பாராட்டும் உலகு**

எனும் வள்ளுவன் வாக்கிற்கிணங்க நீதியையும் நன்மையையும் பெரிதுவந்து சமூகம் பயனுற வாழ்ந்து இன்று மணிவிழாக்காணும் எனது பெருமதிப்பிற்குரிய திருமதி. குககுமாரி விஜயரகுநாதன் அவர்களது நற்பண்பையும் தன்னலமற்ற சேவையினையும் உலகம் போற்றிக்கொண்டாடும் இத்தருணத்தில் அவரை வாழ்த்தும் வாய்ப்புக் கிடைத்தமை பெருமகிழ்வளிக்கின்றது.

கல்வியறிவும் வள்ளன்மையும் நிறைந்த குடும்பத்தில் பிறந்து அறிவாலும் வாண்மைப்பண்புகளாலும் பெரிதுயர்ந்து ஆசிரியராக, அதிபராக கல்விப்பணியாற்றி யதுடன் சமூகமேம்பாட்டிற்காகவும் சமய வளர்ச்சிக்காகவும் அரியசேவையாற்றி வந்துள்ள திருமதி.குககுமாரி விஜயரகுநாதன் அவர்கள் இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ் பிராந்திய நிலையத்துடனும் நீண்டகாலமாக இணைந்து பணியாற்றி வந்துள்ளார். கல்விப்பீடத்தின் பல்வேறுகற்கை நிகழ்ச்சித்திட்டங்களிலும் வருகை தரு விரிவுரையாளர் கற்பித்தற் பயிற்சி மதிப்பீட்டாளர், பரீட்சை மேற்பார் வையாளர் ஒப்படைப்பரீட்சகர் என பல்வேறு பணிகளை ஏற்று நடத்தி பல்கலைக் கழகத்தின் செயற்பாடுகளின் வெற்றிக்காக இவர் ஆற்றிய சேவை அளப்பரியது.

இவர் தனது அரச சேவையில் இருந்து இளைப்பாறினாலும் தொடர்ந்து ஆக்க பூர்வாமான பல பணிகளில் ஈடுபடலாம், ஈடுபடவேண்டும். இவரது பல்வேறு பணிகள் சமூகத்திற்கு இன்றும் பல ஆண்டுகளுக்கு கிடைக்க வேண்டும்.

பல இடங்களில் இக் கட்டுரை ஆசிரியர் பரப்புரை செய்து வருவது போல ஆசிரிய சேவையில் உள்ளவர்கள் எந்த திகதியில் பிறந்தாலும், எந்த மாதத்தில் பிறந்தாலும் இவர்கள் டிசெம்பர் 31ஆம் திகதி வரை சேவை செய்ய இடமளிக்கப்படவேண்டும். இதன் மூலம் குறித்த கல்வியாண்டு கல்வி கல்வி நிர்வாகம் ஒப்பமடையாது.

மேலும் இன்றைய மக்களின் உடல் ஆரோக்கிய நிலையைக் கருத்திற் கொண்டு ஆசிரியர்கள் ஓய்வு பெறும் வயதை 60 இல் இருந்து 65 ஆக உயர்த்த வேண்டும். இச் செயற்பாடுகள் யாவருக்கும் நன்மைபயக்கும்.

திருமதி.விஜயரகுநாதன் ஓய்வுக் காலத்திலும் இவரது வாழ்வும், பணியும் சிறப்பாக அமைய இறைவனை வேண்டுகின்றேன்.

**ராஜினி மாங்களேஸ்வர சர்மா**
**சிரேஷ்ட விரிவுரையாளர்**
**இடைநிலை மற்றும் மூன்றாம் நிலைக் கல்வித் துறை**
**இலங்கை திறந்த பல்கலைக் கழகம்**
**யாழ் பிராந்திய நிலையம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம் அன்பு அதிபரே

அகவை அறுபதில் காலடி எடுத்து வைக்கும் பாசமிகு அன்னையே!

அன்பும்! பண்பும், கனிவும், அடக்கமும் உருவான அதிபரே, உம் அன்பான மொழி கேட்டு மனம் மகிழ்ந்த நாட்கள் உண்டு. அறிவுரைகள் கூறும் போது நித்தமும் புது விடயம் நாம் அறிந்தோம். உம் கனிவான பேச்சினிலே எம்மை நாம் மறந்தோம்.

கம்பீர நடையும், மிடுக்கான பார்வையும் உம்மில் நாம் கண்டோம். உம் சேவைதனில் ஏழு ஆண்டுகளை எம்முடன் நீர் கழித்தீர். உமைக்கண்ட நாள் முதலாய் மகிழ்வான சூழலிலே கற்று வந்தோம். எம் கல்விக்காய் பல நன்மைகளை புரிந்து எம்மீது அக்கறை காட்டி தினமும் எம்மை நேசித்தீர்கள்.

நீங்கள் காட்டிய அன்பில் எம்மை நாமே உணர்ந்தோம். எமக்காக பாடுபட்ட உங்களை என்றும் மறவோம். நீங்கள் ஆற்றிய அளப்பரிய சேவைதனை வாழும் காலம் வரை நினைத்திருப்போம்.

வாழ்க எம் அதிபரே! என்றும் வாழ்க வாழ்கவே!

**இடைநிலைப் பிரிவு மாணவர்கள்**
**யா/நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "எங்கள் சொந்தம் நீடு வாழ்கவே"

## 09.11.2017 அன்று ஓய்வு பெறும் அதிபர் திருமதி. குககுமாரி விஜயரகுநாதன் அவர்களை "சேவை நயப்பு விழாவின் போது வாழ்த்தி வழங்கிய வாழ்த்துப் பாமாலை"

---

### பல்லவி

நீதி நெறி தவமெனவே கொண்ட பரம்பரையில்
கோதிலாக் குககுமாரி பொன்மடந்தை பிறந்தனளே.

ஆதிமுதல் சைவத்தமிழ்ப் பண்பாட்டைப் பேணிக்காத்தே
மேதினியில் ஆறுமுகம் சரஸ்வதி தம்பதி செய்தவத்தால்

(நீதி நெறி)

### சரணம்

கல்விப்பரம்பரையாய் நல்லியல் பில் நனைந்தவராய்
எல்லோர் மனங்களையும் வெல்லு நல் "விநய" வராய்
செல்வர்செஞ்சொல் திருமுகன் சோதரியாய்
சொல்லரிய கல்விச் சேவையில் பதம் பதிக்க

(நீதி நெறி)

முயன்றுமே பட்டங்கள் முனைப்பொடு பெற்றனர்
இயக்கினார் கல்லூரியை முதல்வராய் எட்டு ஆண்டுகள்
முதன்மை ஆசிரியராய், திறந்த பல்கலைக் கழகத்தில்
முன்பள்ளக் கற்கை நெறிக்கு விரிவுரையாளரும் ஆகிட

(நீதி நெறி)

பிள்ளைகள் மூவரைப் பிரியமாய் வளர்த்துமே
உள்ளும் வகையில் உயர்வுகள் சேர்த்தனை
வைத்திய கலாநிதி, பொறியியலாளர், ஆசிரியர் என
வகித்திடப் பதவிகள் வையகம் வாழ்த்திட

(நீதி நெறி)

இனிய நற்றவநெறி இயற்றியே நீடு
நனிவுற நயந்து முயன்ற பயன் வர
இணிவில் கந்தன் இனிதுற வரம் தர
அணி பெறப் பயன்தரப் பரம்பரை சிறந்திட

(நீதி நெறி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் சேவையே மகேஸ்வரன் சேவையென்று
மாணவர் நலனை மாண்புற ஓம்பியே
தக்கபடி தயையுடன் தவம் செய்த
தங்கத்தாயே நீடு வாழ்கவே!

(நீதி நெறி)

இனி வருங்காலம் இன்பமே நிறைளகவே!
நனிசிறந்திடுகவே நன்மைகள் பெருகவே!
பணிபுனை ஈசனும் பார்பதி தேவியும்
தனித்திரு மகளும் பெருவருள் புரிகவே!

(நீதி நெறி)

செங்கை வேலவன் ஈடிலா இனுவையான்
இங்கிதமாக ஈய்ந்திட வரங்களை
மங்கள் பொங்கிட! மகிழ்வு நிலைபெற!
எங்கள் சொந்தமே நீடு வாழ்கவே!

(நீதி நெறி)

ஓய்வு நிலை ஆசிரியர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா நாயகியை மங்கையர்க்கரசி வாழ்த்துகிறாள்



ஆறுமுக சரசுவதி பெற்றெடுத்த புத்திரி – விஜய
ரகுநாத மன்னரின் இல்லத்து மந்திரி - மருத
ராமநாத மகளிரின் புகழ் முன்னாள் - மாணவி
பொருளியலில் பேறுகண்ட சிறப்புப் பட்ட – தாரகி


முதுவியல் கல்வி மாணியே வாழி – நீ
மெய்யியலில் முதுநிலை தேர்ச்சி கண்ட - ஆழி நீ
இரண்டுடன் ஐம்பதுவரை ஆசிரியரின் அணிகலன் -நீ
அன்றுடன் இன்றுவரை ஆசிரிய குழுமத்தின் - அதிபதி
திறந்த பல்கலையிலும் சீர்சேர் விரிவுரைப் - பரிதி நீ
தொலைக் கல்வி கற்கை நெறியின் - போதினி



செந்தமிழில் பேசி வெல்லும் பக்குவம் - அதில்
செக்கு மாடும் உலகை அறியும் - நிச்சயம்
புத்திமதி சொல்லி வரும் தாயவள் - உலகின்
எத்திசையும் வாழ்ந்து வரும் மாணவர் - சேயவர்



லாவண்யப் புதல்வி மருத்துவர் மயூரேசன் - கைத்தலத்தில்
விசாகனோடு வித்தகனும் புகழ் கல்வி – நித்திலத்தில்
ஆறுபடை வீடுகளும் ஆறு முகத்தார் - இல்லத்தில்
ஆண்டாண்டு வாழ்கவே ஆனந்தமாய் வாழ்கவே –அகிலத்தில்
அகவை அறுபது கண்ட குக – குமாரியே
உவகையுடன் நூறு காண நீறுபூசி –
வணங்குகிறோம் வாழ்த்துகிறோம்





திரு மகேசன் கஜேந்திரன்
அதிபர்
யா / நல்லூர் மங்கையற்க்கரசி
வித்தியாலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா நாயகியின் மகத்துவமான வாழ்க்கைப் பாதையில் .............

செந்தமிழ் நாட்டின் மணி மகுடமாக விளங்குகின்ற யாழ் மண்ணிலே சைவமும் தமிழும் சங்கமமாய் விளங்கும் இணுவில் மருதனார் தன்னில் சைவத் தமிழ்க் குடும்பமாம் கந்தையா – சரஸ்வதி ஆசிரியத் தம்பதிகளின் முத்தான முல்லை மலராய் குககுமாரி பிறந்தார். "அம்பாள்" என செல்லமாக அழைக்கப்பட்ட இவர் அம்பாள் அகத்திலே சகோதர சகோதரிகள் அறுவருடன் சிறப்புடன் வாழ்ந்து வந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியை யா/இராமநாதன் மகளிர் கல்லூரியல் ஆரம்பித்து பல்கலைக்கழக புகுமுகம் வரை சிறந்த மாணவியாக இக் கல்லூரியிலேயே கற்று பாடசாலைக்குப் பெருமை சேர்த்தார். இவரது அன்பிற்குரிய சகோதர சகோதரிகளாக

திரு.ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி
பிரதிக் கல்விப் பணிப்பாளர் (ஓய்வு நிலை)
திரு.ஆ.குகமூர்த்தி
ஓய்வு நிலை விரிவுரையாளர், தொழில் நுட்பக்கல்லூரி மருதாளன்
கலாநிதி ஆறு திருமுருகன்
ஓய்வு நிலை அதிபர் யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி
திருமதி.கோணேஸ்வரி இராமச்சந்திரன்
ஆசிரியை (யா/இராமநாதன் கல்லூரி)
திருமதி. விக்னேஸ்வரி நரேந்திரா
விரிவுரையாளர் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி
திருமதி. கேதீஸ்வரி ஆனந்தரத்தினம்
ஆசிரியை யா/இந்துமகளிர் கல்லூரி

என்போர் இணைந்த குடும்ப அனுபவப் பகிர்வுகளோடு தன் பணி தொடர்ந்தார்.

கல்வியிலே சிறந்து விளங்கிய "அம்பாள்" அவர்கள் யாழ் பல்கலைக் கழகத்திலே பட்டங்கள் பல பெற்றுக்கொண்ட வேளையில் தனது பெற்றோரின் ஆசியுடன் இணுவில் வாழ் சைவத் தமிழ் குடும்பமாம் முத்துக்குமாரு செல்லம்மா தம்பதிகளின் ஏக புத்திரரான கணக்காளர் திரு.விஜரகுநாதன் அவர்களைக் கரம் பற்றி திருமண வாழ்வில் இணைந்தார். இவர்களது வாழ்விலே இறையருளால் முத்தான மூன்று செல்வங்களைப் பெற்று நல்லதொரு குடும்பாக சீருடனும் சிறப்புடனும் வாழ்ந்து வந்தனர். பிள்ளைகள், மூவலும் பார் போற்றும் வேந்தர்களாய் கல்வியிலும் ஒழுக்கத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திலும் சிறந்து விளங்கி பெற்றோரது வழி நடந்து இன்று உலர் நிலையில் பணியாற்றி வருகின்றனர். தாய்க்குலத் தலைமகளாம் அன்பான ஏக புத்திரி லாவண்யா பள்ளிப் படிப்பை முடித்து கல்வியியற் கல்லூரியில் பயின்று ஆசிரியையாக மிளிர்ந்த வேளை அவரை திருமண பந்தத்தில் இணைக்க விரும்பிய பெற்றோர் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்ட பரமகுருநாதர் தம்பதிகளின் ஏக புத்திரன் திரு.மயூரேஷன் வைத்திய நிபுணர் அவர்களை மருமகனாக பெற்று மகிழ்ந்தனர். மகள் BSC பட்டப்படிப்பை நிறைவுசெய்து கொழும்பு றோயல் கல்லூரியில் தேசிய வைத்திய சாலையில் வைத்திய நிபுணராகவும் தமது சேவையினை சிறப்பாக ஆற்றி வருகின்றனர். சிரேஷ்ட புத்திரன் ஸ்ரீவிசாகன் விசாகன் பிரித்தானிய நாட்டில் MSC பட்டம் பெற்று நம் நாடு திரும்பி மாத்தளை பல்கலைக்கழகக் கல்லூரியில் விரிவுரையாளராக தென் இலங்கையில் கல்விப் பணியாற்றுகிறார். கனிஷ்ட புத்திரன் ஸ்ரீ வித்தகன் உயிர் மருத்துவ பொறியிலாளராக யாழ்ப்பாணப் போதனா வைத்திய சாலையில் வடக்கு மக்கள் பயனுற நற்பணியாற்றுகிறார். விழா நாயகி பெற்றவர்களை மட்டுமன்றி அவரால் பேணி வளர்க்கப்பட்ட பெறா மக்கள் மருமக்கள் அனைவரும் கல்வியாலும் ஒழுக்கத்தாலும் மேம்பட்டோராய் குடும்பச் சிறப்புடன் நற் பணிகள் ஆற்றுகின்றனர்.

## விழா நாயகியின் கல்விப் பயணத்தில்

1978 - 1982 பொருளியல் சிறப்புக் கலைமாணி

1988 – 1989 பட்டப்படிப்பு கல்வி டிப்ளோமா

2001 – 2002 முதுகல்விமாணி M.Dd

2006 - 2009 முது கல்வியில் முது தத்துவமாணி M.Phil

2009 இல் S.L.P.S இலங்கை அதிபர் சேவையில்

## சேவை விபரம்

05.08.1984 – 13.08.1989 கமு/கார்மேல் பாத்திமாக்கல்லூரி ஆசிரியை

14.08.1989 – 31.12.1995 யா/இராமநாதன் கல்லூரி

01.01.1996 – 31.12.1996 வவு/வவுனியா மகாவித்தியாலயம்

01.01.1997 – 28.02.1997 யா/நல்லூர் மங்கையற் கரசி வித்தியாலயம்

12.12.2009 – 22.06.2010 யா/நல்லூர் மங்கையற் கரசி வித்தியாலயம் (அதிபர் சேவை)

23.06.2010 – 08.11.2017 யா/நல்லூர் தெற்கு ஸ்ரீவிக்னேஸ்வரா வித்தியாலயம் அதிபர்

## ஏனைய கல்விச் சேவைகள்

போதனாசிரியர் தொலைக்கல்வி NIE 1993-1997 வரை

15.11.2003 இலிருந்து முதன்ம ஆசிரியர்

இலங்கை திறந்த பல்கலைக்கழக கல்வியற்துறை யாழ்ப்பாணம் பிராந்திய நிலையம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01.03.2005 இலிருந்து வருகை விரிவுரையாளர்.
இலங்கை திறந்த பல்கலைக்கழக முன்பள்ளி கற்கை நெறி.

15.03.2006 இலிருந்து 2014 வரை இணைப்பாளர் முன்பள்ளிக் கற்கை நெறி O.U.S
25.11.2010 இலிருந்து 2016 வரை வருகை விரிவுரையாளர் பட்டப்படிப்பின் கல்வி டிப்ளோமா கற்கை நெறி O.U.S
31.12.2011-2015 வரை வருகை விரிவுரையாளர் Faculty Of Humanities & Social Science மானிட சமூக விஞ்ஞானம்.

மேற்படி பல்துறைக் கல்விச்சேவைகளின் பட்டறிவால் எம் வித்தியாலய ஆசிரியர்களையும் வாண்மைப் படுத்தி மாணவர் கல்வியையும் மேம்படுத்தி நிறைவாக கல்விச் சேவையை ஆற்றிய எம் அதிபரை நன்றியோடு போற்றுகிறோம். அவரது சேவை என்றும் எம்மவர்க் குத் தொடர முழு மனதுடன் இறையாசி வேண்டி வாழ்த்தி வணங்கி நிற்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நாம் அனைவரும் நயந்து வியந்து போற்றும் நயங்கள் பல கொண்ட நல் அதிபர்**

எம் அதிபரின் நற்பணிகள் சொல்லி அடங்காது. எமது அதிபர் அவர்கள் பல வகிபாகங்களை வகித்து, தனது சேவையிலிருந்து ஓய்வு பெறுவது குறிப்பிடத்தக்கது. ஆசிரியராக, முதன்மை ஆசிரியராக, வருகை விரிவுரையாளராக, போதனாசிரியராக, அதிபராக சேவையாற்றியுள்ளார். ஒவ்வொரு பதவியிலும் தனது தனித்துவக் குணங் களால் முத்திரை பதித்துள்ளமை நயக்கத்தக்கதும், வியக்கத்தக்கதுமான சிறப்பம்சம் ஆகும்.

எமது பாடசாலையில் அதிபராகச் சேவையாற்றிய காலத்தில், எமது மாணவர்களுக்குச் சிறந்த தாயாகவும், ஆசிரியராகவும், அதிபராகவும் அதேவேளையில் ஆசிரியர்க ளாகிய எமக்கு சகோதரியாகவும், தாயாகவும், நட்பும் அன்பும் நிறைந்த அதிபராகவும் கடமையாற்றியுள்ளார் என்றால் அது மிகையாகாது. சிலர் பதவிகளால் பெருமையடையலாம், ஆனால் சிலரால் பதவிகள் பெருமையடைவதுண்டு அந்த வகையிலே அதிபர் பதவி எமது அதிபரின் சேவையால் பெருமையடைந் திருக்கின்றது. எமது அதிபரின் சேவையை நயக்கும் இந்த "குக ஒளி" மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் யாழ்/நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலய ஆசிரியர்கள், ஊழியர்கள் சார்பில் ஆசிரியர் நலன்புரிக் கழகம் மிகவும் பெருவகை அடைகின்றது.

அதிபரது சேவைக்காலத்தின் போது, நாம் மறக்கமுடியாத, பசுமையான நினைவுகளை அனைத்து ஆசிரிய உள்ளங்களிலும் தாங்கி நிற்கின்றோம். எம் அதிபரது சேவையை எமது பாடசாலையின் எந்தவொரு அசிரியரும் நினைக்க மறக்கவோ, மறக்க நினைக்கவோ மாட்டார்கள். எமது பாடசாலைக்கு, எம் அதிபர் கிடைத்தமை பாடசாலை வரலாற்றில் ஒரு திருப்புமுனையாக, மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதிகளும் மாணவர்களின் பல சாதனைகளும் சான்று பகர்கின்றன. புலமைப் பரிசில் பெறுபேறுகளும், நல்லாசிரியர் விருதும் ஏனைய ஆசிரியர்களின் பெறு பேறுகளும் அதிபரின் ஆளுமையைக் காட்டி நிற்கின்றன எமக்கு இந்த அதிபர், எம் வாழ்வில் மறக்க முடியாத ஒரு நல்ல அதிபர் என்பதைக் கூறுவதில் பெருமகிழ்சி அடைகின்றோம். அவரது கணவர், பிள்ளைகள், சகோதரர்கள் அனைவரும் பல்வேறு சிறப்புக்களையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்ந்து இந்த மண்ணிற்கு தொடர்ந்தும் பணியாற்ற வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சி வாழ்த்தி வணங்கி விடைபெறுகின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிக் கழகம்**
**யாழ்/நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உற்றறி உளவியல் - அறிவுப்புலத்தில் ஒரு புதிய திருப்பம்

பேராசிரியர் சபா.ஜெயராசா

மரபுவழி உளவியலில் இருந்து விலகிய மாற்றுக் கோட்பாடாக "உற்றறி உளவியல்" (CRITICAL PSYCHOLOGY) மேற்கிளம்பியுள்ளது. அத்துடன் மரபு வழி உளவியலுக்கு அறைகூவல் விடுக்கும் வகையிலும் அதன் சிந்தனை வீச்சுக்கள் அமைந்துள்ளன.

சமூகமாற்றத்தின் வழியாகவே உள நோய்கள் தீர்க்கப்படலாம் என்பது உற்றறி உளவியலின் முடிபு. ஆழ்ந்து நோக்கினால், மார்க்சிய உளவியல் வழித்தடத்தில் உற்றறி உளவியல் எழுகோலம் பெறுவதைக் காண முடியும்.

மரபுவழி உளவியல் தனிமனிதரை மட்டுமே குவியப்படுத்தி வளர்ச்சி கொண்டுள்ளது. சமூகநோக்கையும் சமூக இயங்கியலையும் உளப் பகுப் பியல், நடத்தையியல், மானிடவி யல் முதலாம் உளவியலை உருவாக் கியோர் தரிசிக்கத் தவறி விட்டனர்.

மார்க்சியமே உளவியலைச் சமூகத் தளத்துக்கு இட்டுச் சென்றது. அதன் அடிச்சுவட்டில் உற்றறி உளவியல் தொடர்ந்து வருகின்றது.

சமூகத்தில் நிலவும் அதிகார வேறு பாடுகளும், அவற்றின் அழுத்தங்க ளுமே உளநெருக்குவாரங்களையும் உளநோய்களையும் உருவாக்குகின் றன. அந்நிலையில் ஒடுக்கு முறை களையும் சுரண்டல்களையும் வேரோடு பிடுங்கியெறியும் சமூக மாற்றத்தின் வழியாகவே அனைவருக்கும் உளச் சுகத்தை வழங்கமுடியும். மார்க்சியம் தவிர்ந்த ஏனைய உளவியற் கோட்பாடு கள் சமூக ஒடுக்கு முறைகளையும் மேலாதிக்கத்தின் வழியாக நிகழ்த்தப் படும் மன உடைவுகளையும் கண்டறி யத் தவறிவிட்டன.

மார்க்சியச் சிந்தனைகளை அடியொற் றிய உளவியல் உருவாக்கத்தின் முன் னோடிகளாக பவ்லோவ் மற்றும் வைக் கோட்சி ஆகியோர் விளங்குகின் றனர். பவ்லோவ் என்பவர் உளவியலுக்கு நவீன பரிசோதனை வலுவைக் கொடுத்தார். வைக் கோட்சி என்பவர் கற்றல் என்பது சமூக விசைகளி னூடாக நிகழ்த்தப் படும் செயல் முறை என்பதை ஆதாரப்படுத்தினார்.

மார்க்சியத் தடத்தில் அலெக்சிவி யொன்யெவ் பண்பாட்டு வரலாற்று உளவியலையும் வினைப்பாட்டுக் கோட்பாட்டையும் (ACTIVITY THEORY) உருவாக்கினார்.

அக்கோட்பாட்டின் ஆக்கத்தில் பிறி தொரு மார்க்சியச் சிந்தனையாளரா கிய அலெக்சாண்டர் லரியாவும் பங்கு கொண்டார்.

அத்தகைய மார்க்சிய உளவியற் சிந்தனைகளின் தொடர்ச்சியும் நீட்சியு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாக 1970ஆம் ஆண்டளவில் உற்றறி உளவியல் உருவாக்கம் பெற்றது. பேர்னிலில் உள்ள பிறியி பல்கலைக் கழகத்தில் அதுகால்கோள்கொண்டது ஆனால் 2007ஆம் ஆண்டுக்குப் பின்னர்தான் அந்த உளவியல் தொடர்பான ஜேர்மன் எழுத்தாக்கங் கள் ஆங்கிலத்தில் மொழி பெயர்க் கப்படலாயின. ஜேர்மனியில் வளர்ச்சி பெற்ற இளைஞர் இயக்கங்கள் மார்க்கி யச் சிந்தனைகளை அடியொற்றியே எழுகோலம் பெற்றன. பேர்லின் நகரமே இளைஞர் எழுச்சியின்மைய மாக அமைந்தது. இளைஞர் எழுச்சி யின் கருத்தியல் வேராக மார்க்சியம் அமைந்தது.

பிரச்சினைகளை விஞ்ஞான பூர்வமாக விளங்கிக் கொள்வதற்கு மார்க்சியத் தருக்கம் வழியமைத்தது. அத்தகைய பின்னணியில் உற்றறி உளவியல் தோற்றம் பெற்றது.

அதன் முன்னோடி எழுத்தாளராக விளங்குபவர் கிலஸ் ஹோல்ஸ்காம். நடத்தைவாத உளவியலை அவர் முதற்கண் திறனாய்வுக்கு உட்படுத்தி னார். மனித நடத்தைகள், தூண்டி – துலங்கல் என்ற பொறி முறைக்குள் மட்டும் கட்டுப்பட்டவையன்று என்ப தைச் சுட்டிக்காட்டினார். மனித நடத் தைகளை உருவாக்கும் பண்பாட்டு விசைகளையும் சமூக இயங்கிய லையும், நடத்தைகளின் உள்ளமைந்த செயல் முனைப்புக் களையும் நடத்தை உளவியல் சுட்டறியத் தவறி விட்டதை விளக்கினார்.

விஞ்ஞான முறைமை பற்றிய ஆய்வு களில் அவர் ஊன்றிய கவனம் செலுத்தினார். விஞ்ஞான மெய்யிய லாளர் தோமஸ் சாமுவேல் கூன் உருவாக்கிய"ஆட்சிநிரலின் பெயர்ச்சி "(PRADIGM SHIFT) என்ற கருத்தாக்க மும் அவர் மீது செல்வாக்குச் செலுத் தியது.

வரலாற்றுத் தொடர்ச்சியில் சமூக மேலா திக்கமானது, பொருண்மியக் கட்டமைப்பை தக்கவைத்துக்கொள் வதற்குரிய, மீள மீள ஆக்கும் செயல் முறையினை உருவாக்கி வந்துள்ளது. பண்பாடு என்பது செயற்பாடுகளை மீள மீளச் செய்யும் வடிவம் "சமூக மீளாக்கல்"(SOCIAL REPRODUCTI ON) பற்றிய மார்க்சின் கருத்துக்களை உள்வாங்கிய ஹோல்காம் மனித நடத் தைகளை உருவாக்குதலில் பொருண் மியப் பண்பாட்டின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்.

வகுப்பறை உளவியல் பற்றியும் அவர் விரிவாக ஆராய்ந்தார். வகுப்பறைக் கற்பித்தலும், அதன் அமைப்பும் வரலாற்று வளர்ச்சியுடன் தொடர்பு டையவை. மார்க்சியக் கண்ணோட் டத்தில் கூறுவதானால் அதுவும் பண்பாடு போன்று அதிகாரத்தைத் தக்கவைப்பதற்குரிய செயற்பாடுகளை மீள மீளப் பிறப்பிக்கும் வடிவம். வகுப் பறைக் கற்பித்தல் தொடர்பான அவரது சிந்தனைகளில் மிசேல் பூக்கோவின் எழுத்தாக்கங்களின் செல் வாக்கும் இடம்பெற்றுள்ளமை யைக் காணலாம். வகுப்பறை உள்ளிட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்துப் பண்பாட்டு நிறுவனங் களும் அதிகாரத்தைச் செயற்படுத்தும் வடிவங்களாக இயங்குதலை பூக்கோ சுட்டிக் காட்டினார்.

வகுப்பறைகள் மாணவரின் உள் ளார்ந்த ஆற்றல்களை வளர்ப்பதில்லை கற்பித்தல் உபாயங்கள் அனைத்தும் மாணவரின் ஆற்றல்களை முழு மையாக வளர்க்க முடியாத செயற்பாடு களையே மேற்கொள்கின்றன. அதற் குப்பதிலாக "விரிவாக்கற் கற்றல்" (EXPANSIVE LEARNING) என்ற கருத்தாக்கத்தையும் அதனைச் செயற் படுத்தும் வழிமுறைகளையும் முன் வைத்தார். "சூழமைவுகளிற் கற்றல்" (LEARING IN CONTEXTS) என்பதே அவரின் மாற்று எடுத்துரைப்பு.

உற்றறி உளவியலைக் கட்டி யெழுப்பும் பல்வேறு எழுத்தாக்கங்கள் இருபத் தோராம் நூற்றாண்டிலிருந்து அதிக அளவில் வெளிவரத் தொடங்கி யுள்ளன.

மான்செஸ்டர் மெற்றபோலிட்டன் பல் கலைக் கழகத்தைச் சேர்ந்த இயன் பார்க்கர் மற்றும் எரிக்கா பர்மன் ஆகியோர் ஒன்றிணைந்து "உற்றறி உளவியலின் ஆண்டு மீள் நோக்கு அறிக்கைகளை வெளியிட்டனர்"

உற்றறி உளவியலில் இடம்பெற வேண்டிய நான்கு முக்கியமான கூறுகள் அந்த அறிக்கையிலே வலி யுறுத்தப்பட்டுள்ளன. அவையாவன:

1. மரபு வழி உளவியலானது, அதிகாரத்தில் உள்ளவர்களையும், அவர்களின் கருத்தியலையும் நிலை யுறுத்துவதற்கு எவ்வாறு செயற்பட்டு வருகின்றது என்பதைப் பரிசீலனைக்கு உட்படுத்துதல்.

2. வரலாற்றுவளர்ச்சியில்உருவாக்கம் பெற்ற பிரதான உளவியல் வகைகள் வரலாற்று நியமங்களாலும் பண்பாட் டுக் காரணிகளாலும் கட்டுமை (CONSTRUCT) செய்யப்பட்டுள்ள விதத்தை ஆராய்தல். அத்துடன் மாற்று வகையான உளவியல் எவ்வாறு எதிர்த்துத்தாக்குப் பிடிக்கின்றது என்ப தைக் கண்டு கொள்ளல்.

3. புலமை நிலை மற்றும் வாண்மை நிலைக் கோட்பாடுகளையும் நியமங் களையும் நடைமுறைகளையும் மீறிய வகையில் நாளாந்த வாழ்க்கையில் உளவியல் செயற்படும் விதங்க ளையும் மனிதர் உருவாக்கும் தற்கட்டுப்பாட்டு வடிவங்களையும் ஆய்வுக்கு உட்படுத் துதல்.

4. உளவியற் புலமையாளரும் வாண் மையினரும் நாளாந்தம் எந்தவகை யிலே தொழிற்படுகின்றனர் என்பதைக் கண்டறிதலும் அவற்றிலிருந்து அவர்க ளின் ஒரு தலைப்பட்சமான செயற் பாடுகளை மறுதலிப்பதற்குரிய ஏற்பாடு களை உருவாக்கித் தருதலும்.

அறிகை நிலையிலே மாற்றுக் கருத்துக் களைத் தாங்கியுள்ள உற்றறி உளவி யல், அதனோடிணைந்த ஏனைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறைகளிலும் செல்வாக்குகளை ஏற்படுத்தி வருகின்றது. விடுதலை உளவியல், நல உளவியல், உள மருத்துவம், சூழலியல் உளவியல், சீர்மிய உளவியல் முதலாம் துறைகளிலும் அதன் கருத்தியற் செல்வாக்கு நீட்சி கொண்டுவருகின்றது.

அண்மைக்காலத்தைய நேர்க்கோல உளவியல் (POSITIVE PSYCHOLOGY) துறையிலும் அதன் செல்வாக்கு விரவியுள்ளது.

உளநோய்க்குச்சிகிச்சை செய்வதைக் காட்டிலும் திருத்தியான நிலையில் வாழ்வுக்குரிய வழிவகைகளை அமைத்தலும், விஞ்ஞான விளக்கங்களைத் தேடுதலும், ஊடுதலையீடுகளை மேற்கொள்ளலும் நேர்க்கோல உளவியலில் முன்னெடுக்கப்படுகின்றன.

உள மருத்துவச் செயற்பாடுகளை நிராகரிக் கும் எதிர் உள மருத்துவமும் (ANTI PSYCHIATRY) உற்றறி உளவியலின் செல்வாக்கை உட்கொண்டுள்ளது.

உள நோய்க்குக் கொடுக்கப்படும் மருந்துகளால் ஏற்படும் பாதிப்புக்களும், மின் அதிர்ச்சி முறையால் ஏற்படுத்தப் படும் விளைவுகளும், திறனாய்வுடன் நோக்கப்படுகின்றன.

மாற்றுவழிகளிலே மனச்சுகம் தேடல் பற்றிய நடவடிக் கைகள் முன்வைக்கப் படுகின்றன.

உற்றறி உளவியல் தோற்றம் பெறு வதற்கு முன்னரே மார்க்சிய சிந்தனை களின் செல்வாக்கு எதிர் உள மருத்துவச் சிந்தனைகளைத் தோற்று வித்துள்ளது. 1967ஆம் ஆண்டிலே டேவிட் கூப்பர் "எதிர் உள மருத்துவம்" என்ற சொல்லாட்சியை உருவாக்கி யமை குறிப்பிடத்தக்கது.

மார்க்சியத்தின் செல்வாக்கினுக்கு உட்பட்ட பிறிதோர் ஆய்வாளராகிய மிசேல் பூக்கோ மனநோய் என்பது மேலாதிக்கத்தினால் கட்டுமை செய்யப் பட்ட வடிவம் என்று விளக்கியதுடன் அந்தக் கருத்தாக்கத்தை வினாவுக்கு உட்படுத்தினார்.

மார்க்சியத்தின் உள்வாங்கலோடு உருவாக்கம் பெற்ற பிறிதோர் உள வியற் கோட்பாடாக அல்லது விடுதலை உளவியல் (LIBERATION PSYC HOLOGY) விடுதலைச் சமூக உளவியல் அமைந்து வருகின்றது.

தென்அமெரிக்கச் சூழலில் வளர்ச்சி பெற்ற அந்த உளவியல் ஒடுக்கு சமூகத்தை மாற்றியமைக்கும் உள வியல் நடவடிக்கைகளை அடிப்படை யாகக் கொண்டது.

மார்க்சியமும், உற்றறி உளவியலும் அவற்றோடு இணைந்து வளர்ந்து வரும்உளவியற்சிந்தனைகளும் ஏற்றத்தாழ்வும் ஒடுக்கு முறையும், மேலாதிக்கமும் மிக்கசமூகத்தையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றால் அவலமுறும் மனிதமனங் களையும் ஊடுருவி நோக்குகின்றன. மாற்று அணுகு முறைகளை முன் வைக்கின்றன. ஆனால் எமது சூழலில் இன்னமும் பழைய உளவியலோடு உறவாடும் அவல நிலையே காணப்படு கின்றது.

## நோக்கிய நூல்கள்

Hard wood, V.(2006) Diagnosing Disorderly Children, London &New york: Routledge.
Ibanez,T& IniguezRueda, L(1997) Critical Social Psychology suge Books
Sloan, T(e.d) (2000) Critical Psychology: Voices for change, London: Macmillan.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




திருமணப் பதிவன்று மாமனாரோடும் மாமியாரோடும்



திருமணப் பதிவன்று திருமகனும் திருமகளின் பெற்றோரும்



திருமண நாளன்று அலங்கரித்த ஆரணங்குடன்



திரு.மு.விஜயரகுநாதனின் 1 ஆவது பட்டமளிப்பு



கைத்தலம் பற்றிய பின் அழகூட்டும் அம்பாளாக



முது தத்துவமாணி - 2010

26TH CONVOCATION - 2010



பொருளியல் சிறப்புக் கலைமாணி



முது தத்துவமாணி - 2010

CONVOCATION - 2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அன்னையும் முதல்வியும் அதிபர்களின் அருகே...




தங்கை முதுமாணியாக



பாச மகளின் முத்த மழையில்



அண்ணியும் பெற்றவர்களும் உடன் உறவுகளுடன் அணியாக



புத்திரரும் பெற்றவரும் மூத்தவரும் மருகரோடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர்களது நேர முகாமைத்துவமும் தொழில் முறை முன்னேற்றமும்

பேராசிரியர் மா.சின்னத்தம்பி

**அறிமுகம் :-**

ஆசிரியர்கள் சமுதாய செயல் முறையில், தலை முறையினரின் அறிவு, சிந்தனை, எண்ணம், நடத்தை, புத்தாக்கம் தொடர்பான மாற்றங்களை ஏற்படுத்துவதில் முக்கியமானவர்கள். ஆசிரியர்களது வேலை முறையானது அவர்களை முன் மாதிரியாக கொள்கின்ற வகையில் தனித்தன்மை கொண்டது. தலைவர்களையும், விஞ்ஞானிகளையும் ஞானிகளையும் உருவாக்கும் மனிதவள மேம்பாட்டில் ஆசிரியர்கள் மிகவும் முக்கியமானவர்கள்.

சமுதாய கவன ஈர்ப்புக்குரிய பல்வேறு உன்னதங்களைக் கொண்ட ஆசிரியர்களது தொழில்முறை வாழ்க்கை என்பதில் நேரத்தை முகாமை செய்யும் திறன்களும், மனப்பாங்கும் மிகமுக்கியமானவை.

தமக்குரிய வாழ்நாள் நேரத்தை திட்டமிடுதல், ஒதுக்கீடு செய்தல், விரயங்களை தவிர்த்தல், வினைத்திறனை உறுதிப்படுத்துதல், அதனடிப்படையில் தொழில் உயர்ச்சியை பெறுதல் என்பன முக்கியமானவை.

ஆசிரியர் தொழிலின் உச்சங்களைத் தொடுவதற்கு அவசியமான பல்வேறு திறன்களை நேரமுகாமைத்துவ முதல் நிலை வகிக்கின்றன.

தனது நேரத்தை தானகவே விரயமாக்குபவரால் எந்த முன்னேற்றங்களையும் உருவாக்க முடியாது. மாறாக தனிநபர் வாழ்வு, குடும்ப வாழ்வு, தொழில் முறை வாழ்வு, சமுதாய வாழ்வு போன்ற பல நிலைகளிலும் பயன்மிக்க மனிதர்களாக செயல்பட முனைகின்ற ஒவ்வொரு ஆசிரியருக்கும் நேர முகாமைத்துவ திறன்கள் முக்கியமானவை. இவையாற்றிய சில அம்சங்கள் இங்கு பரிசீலிக்கப்படுகின்றது.

ஆசிரிய தொழிலில் அதியுயர் முன்னேற்றம் பெறுதல் என்பது நேரமுகாமைத்துவத்துடன் கொண்டுள்ள தொடர்பு பற்றி இங்கு கவனம் செலுத்தப்படுகின்றது.

**நேர முகாமைத்துவ பாதிப்பன.**

ஆசிரியர்களது நேரமுகாமைத்துவம் பின்வரும் காரணிகளின் பாதிப்புக்கு உள்ளாகக்கூடியதாகும்.

1. பாடசாலைகளில் நிலவும் நிறுவனப் பண்பாடு
2. ஆசிரியரது தனிப்பட்ட ஆளுமையும் திறன்களும்
3. அதிபர், மற்றும் பகுதித்தலைவர்களது நேர முகாமைத்துவ பண்புகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. ஆசிரியர் பொறுப் பேற்றுக் கொள்ளும் தொழில் சார்ந்த பல்வேறு வகிபாகங்கள்

**பாடசாலைகளின் பயன்பாடு**

பாடசாலை தொடர்பான சமூகம், பணியாளர்கள், நிர்வாகிகள், முகாமையாளர்கள், மாணவர் மற்றும் ஆசிரியர் ஆகிய அனைவரும் உண்மையாக கொண்டுள்ள நம்பிக்கைகளிலும் முன்னுரிமை வழங்கும் விழுமியங் களும் தான் பாடசாலையிற் பயன்பாடு ஆகும்.

அனைவரது புரிந்துணர்வு, ஏற்றுக் கொள்ளும் பாடசாலையின் தொழிற்பாடு பற்றிய எண்ணங்கள், அவை தொடர்பான உணர்வுகள்தான் பாடசாலைப் பயன்பாட்டின் இயல்பையும் வலிமையையும் தீர்மானிக்கின்றன.

நேரம்பற்றிய நம்பிக்கைகள், வேலைகளைப் பகிர்ந்து கொள்வதிலான உடன்பாட்டுணர்வு, பயன்மிக்க வேலைகளுக்கு அனைவரும் வழங்கும் முன்னுரிமை, நேரவிரயத்துக்கு எதிரான நடைமுறைகளுக்குரிய ஆதரவுகள் போன்றன எல்லா நிலைகளினதும் எல்லோரிடமும் வலுவாக காணப்படும் போது ஆசிரியர்களும் அதற்கு கட்டுப் படுபவர் தமது பிரிக்க முடியாத நம்பிக் கையாகவும் பழக்கமாகவும் நேர முகாமைத்துவத்தை ஏற்றுக்கொள்வர்.

பாடசாலை என்பது ஒரு சிறிய சமூகம் தான் அதற்கே உரித்தான விழுமியங் களும், முன்னுரிமைகளும் உள்ளன. வெள்ளிக்கிழமைக்கு இஸ்லாமிய பாடசாலைகள் மற்றும் இந்துப் பாடசாலைகள் முன்னுரிமை வழங்கும் போது புதன்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளுக்கு கிறிஸ்தவ பாடசாலைகள் முன்னுரிமை வழங்கலாம்.

இந்தப் பாராட்டுச் சூழல் ஆசிரியர்களது தினச்செயல் ஒழுங்குகளில் மாற்றங்களை உருவாக்க முடியும்.

பாடசாலை தலைவர்களது நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்கள் மற்றும் பாடசாலையுடன் தொடர்புடைய சமூக நிறுவனங்களின் நேரமுகாமைத்துவ நடத்தைச் செறிவுகள் பாடசாலை ஆசிரியர்களின் நேர முகாமைத்துவ நோக்கையும் மாற்றி விடும். இதே போல் சரியானவை, தவறா னவை என்பவற்றை தீர்மானிப்பதுதொடர்பான நேர ஒழுங்கு விதிமுறைகளும், செயல் ஒழுங்குகளும், தண்டனைகளும், வெகுமதிகளும் கூட தனிப்பட்ட ஆசிரியரது நேரம் சார்ந்த அணுகு முறை, மதிப்பு என்பவற்றை வலுவாக பாதிக்க முடியும்.

பாடசாலை வேளைகளில் தடுக்கப் படுகின்ற அநாவசிய தொடர்பாடல், பொதுத் தொடர்பால்களிலான நேரச் சிக்கனங்கள், பொருத்தக் கேடான இடங்களிலான தொடர்பாடலுக்கு எதிரான வெறுப்பு உணர்வுகள் போன் றனவும் ஆசிரியரது நேரம்பற்றிய கண்ணோட்டத்தை ஒழுங்குபடுத்தி விடமுடியும். குழு நிலைகளிலும், முகாமைத்துவ மட்டத்திலும் தீர் மானங்கள் மேற்கொள்வதில் கையா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளப்படும் நேரச்சிக்கன நடைமுறைகள் ஆசிரியர்களது நேரம் பற்றிய எச்ச ரிக்கை உணர்வுகளை ஒழுங்குபடுத்தி விடும். துணைநிலை, ஊழியர்களின் சுறுசுறுப்பு, வேலை நாட்டம், மனப் பாங்கு பணிசார் மென்திறன்கள் போன்றனவும் ஆசிரியரது நேரம் பற்றிய எண்ணங்கள் பாதிப்பை ஏற்படுத்த முடியும்.

நவீன தொழில்நுட்பங்கள் ஆசிரியர் அறை, வகுப்பறை தேநீர்ச்சாலை, நூலகம் போன்ற இடங்களில் உத்தம மாகப் பயன்படுத்துவதற்குரிய முறை யில் ஒழுங்கமைப்பட்டாலும் ஆசிரியர் களிடம் நேரச்சிக்கனம் என்பது இயல் பான பழக்கமாகிவிடும். கையொப்பம் இடுதலுக்கென அறிமுகப்படுத்தப் பட்டுள்ள பொறி முறை கூட அவ்வாறான ஏற்பாடுகளில் ஒரு அங்க மாகவே நோக்கப்பட வேண்டும்.

வருடாந்த பரிசளிப்பு தினங்கள் ஆசிரியர் தினங்கள், பெற்றோர் தினங் கள் போன்றவற்றில் "நேரங்களை உன்னதமாக பயன்படுத்தியவர்கள்" என்ற பகுதியில் குறைந்தது ஐந்து ஆசிரியர்களுக்கு வெகுமதிகளும் வாழ்த்துக்களும் தெரிவிக்கப்பட வேண் டும். இத்தகைய பாடசாலை முகா மைத்துவக் கொள்கை ஆசிரியர்களது நேர ஒழுங்குகளில் நேர் மறையான தாக்கங்களை ஏற்படுத்த முடியும். பாடசாலைக் கலாச்சாரம் இவ்வாறு பல நிலைகளில் தனிப்பட்ட ஆசிரியரது தொழில் முறைசார் நேர முகாமைத் துவத்தில் பாதிப்புக்களை ஏற்படுத்த முடியும்.

தேசிய பாடசாலைகளைப் போல வகை *III* பாடசாலைகளும் நேர முகா மைத்துவப் பண்பாட்டை ஒழுங்கு படுத்த வேண்டும்

**தனிப்பட்ட ஆசிரியர் ஆளுமையும் திறன்களும்**

ஆசிரியர்கள் தமது தனிப்பட்ட ஆற்றல் நாட்டம், விழுமியம் முன்னேற்றம் தொடர்பாக தெளிவான அகக் காட்சியை உருவாக்குவதும் அதற்குரிய நேர் மனப்பாங்கை வளர்ப்பதும், அதற்கு இசைவான நடத்தைக் கோலங்களை வடிவமைப்பதும் முக்கி யமாகும்.

தொழில் ரீதியில் வாய்ப்புக்குரிய எல்லாப் பதவி உயர்வுகளையும் பெருளாதார நலன்களையும் சமூகத் தொடர்புகள் மற்றும் புகழ் என்பவற்றை பெற்றுக் கொள்வது தொழில் ரீதியான அபிவிருத்தி என்கிறோம்.

எல்லா ஆசிரியர்களும் இது பற்றி அறிந்து கொள்வதும் அவற்றை பெறுதற்குரியதாக திட்டமிடுவதும், அவற்றைக் கையகப்படுத்துவதற்குரிய சொல் ஒழுங்கள், உபாயங்கள், செயற் பாடுகள், நுட்பங்கள் போன்றவற்றில் கவனம் செலுத்துவதும் அவசியம் இவை எல்லாவற்றிலும் நேர முகா மைத்துவ நடைமுறைகளும் முக்கிய மானவை. நாளாந்த, வாராந்த,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதாந்த, வருடாந்த நேரத் திட்டமிடல் மிகவும் அவசியம்

கல்வி, பயிற்சி அவை பற்றிய இடைய றாத நாட்டம், கடின உழைப்பு, வலுவூட் டல் தொடர்பாக அதியுயர் கவனம் செலுத்துவதும் அதற்குரியதான நேரத் திட்டமிடலைப் பின்பற்றுவதும் அவசிய மாகும்.

கற்றதை நடைமுறையில் பிரயோகிக் கின்ற திறன்களும், மன வைராக்கிய மும், தொடர் கவனமும் ஒன்றிணைக் கப்படுதல் வேண்டும். இதற்குரியதாக நேரத்தைப் பயன்படுத்துவதில் பின் வரும் வினாக்கள்(ISSUES) முக்கிய மானவை.

**1.** வேலையின் தன்மை சார்ந்தவை

தயார்செய்தல், கற்பித்தல், மதிப்பீடு செய்தல், குறைதீர் கற்பித்தல், சிறப்பான விளக்கங்கள் உதவிகள் வழங்குதல், பாடசாலை நிகழ்ச்சித் திட்டங்களில் முழுமையாக ஈடுபடு தல், பாடசாலை சமூக தொடர்பு களை அதியுயர் திருப்தியுடன் பேணுதல் போன்ற பலவற்றுக்கும் நேரத்தை கவனமாக ஒதுக்கீடு செய்தல்.

**2.** ஆசிரியர் தம் மனப்பாங்கு மற்றும் ஆளுமை சார்ந்தவை.

தம் மீது உயர்மதிப்பை தாமே உரு வாக்கிக் கொள்ளவேண்டும். வெற்றி களை நேர்மறையாக அடிக்கடி அக நிலையில் உணர்வதும் அவசியம், வாழ்க்கையின் தொழிலின் முன்னுரி மைகளை கவனமாக ஒழுங்குபடுத்த வேண்டும். அதற்குரிய நபர்களுட னான தொடர்பாடல்களுக்கு போதிய நேரம் ஒதுக்க வேண்டும். இவற்றுக் குரிய நேரமதிப்பீடு முக்கியமானவை.

**3.** ஆசிரியரது வேலைத்திறனில் உதவி செய்யக் கூடியவர்கள் தொடர் பானவை.

சகபாடிகள், குடும்ப அங்கத்தவர்கள், நெருங்கிய நண்பர் கள், பொழுது போக்கு பழக்கங்கள், என்பன ஆசிரியரின் வேலை சார்ந்த ஒழுங்குகளிலும், வினைத்திறனிலும் அதிக செல்வாக்கு செலுத்தக் கூடி யன.

இவற்றுக்குரிய நேர ஒதுக்கீடுகளை மிகவும் எச்சரிக்கைகளுடனும் நிதான மாகவும் மேற்கொள்வது அவசியம்.

**வேலையிலான நேர விரையங்கள்**

ஆட்களிடையிலான இடைவினை யுறவுகளும் வேலை மீதான உண்மை யான பற்றுறுதியும் மிகவும் அடிப்படை யானவை.

தொழில் ரீதியான முன்னேற்றங்கள், ஆரோக்கியம் உண்மையான குதூக லம் என்பன ஒன்றிலிருந்து மற்றொன் றைப் பிரிக்க முடியாதன. இவற்றுக்குத் தடை ஏற்படுத்தும் காரணிகளின் "நேர விரய பிசாசுகள்" என்று கருத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். அவற்றை நிதானமாக கண்டறிய வேண்டும்.

1. சகபாடிகளுடன் அவசியமில்லாமல் நீண்ட நேரம் உரையாடுதல், பணிகளைப் பற்றியல்லது ஆட்களைப் பற்றி அதிகம் உரையாடுதல்.

2. மேல்பதவியில் இருப்பவர்களுக்கு எதிரான மனப்பாங்கு, அணுகுமுறைகளை வளர்த்துக் கொள்ளுதல், பணிபுரியும் ஆற்றலை இவை அதிகம் பாதித்துவிடும் என்பதை நன்கு உணர்தல் வேண்டும்.

3. உங்களை முன்னேற்றாத, உங்களுக்குத் தொடர்பில்லாத எழுத்து வேலைகளில் அதிக நேரத்தை செலவிடுதல்.

4. வேலை பற்றிய இலக்குககள் எதுவும் இல்லாது ஆட்களை மையப்படுத்திய செயல்களில் அதிக நேரம் செலவிடுதல்.

5. திட்டமிடப்படாதசெயல்களுக்கு மதிப்பளிப்பதால் முன்னரே திட்ட மிட்ட வேலைகளை தாமதப்படுத்தல்.

6. முன்னெச்சரிக்கையான சிந்தனையில்லாமல் எவர் கேட்டா லும் “ஆம்” (YES) என ஒத்துக் கொள்ளுதல். “இல்லை” (NO) என்று சொல்லும் தெளிவு மிக்க உறுதியான நடத்தையைக் கற்றுக் கொள்ளாதிருத்தல்.

7. எல்லா ஆவணங்களையும் நன்கு ஒழுங்குபடுத்திய முறையில் பேணுவதற்கும் திகதியின்படி தொடர்பாடல்களை மேற்கொள்ள கற்றுக் கொள்ளாதிருத்தலும்.

8. மாற்று ஏற்பாடுகளுக்கு உதவி செய்யக்கூடிய பல நண்பர்களை கவனமாகப் பராமரிக்கத் தெரியாதிருத்தல்.

9. மணிக்கூடு, வாகனம் வேலைக்குரிய மேசை,தொடர்பாக நிறைவான செயல் திறனை உறுதிப்படுத்துவதற்கு முன்னுரிமை வழங்காதிருத்தல்.

10. அதிகாலையில் பணிபுரியும் வேலைப் பழகத்தை கற்றுக் கொள்ளாதிருத்தல். தாமதங்களுக்கு வெட்கப்படவும், வருத்தப்படவும் பழகாதிருத்தல்.

**முடிவுரை**

பணிபுரியும் இடம், பணிபுரியும் ஆட்கள், பணிபுரியும் இடத்தின் பண்பாடு என்பன பற்றி போதிய விழிப்புணர்வை ஆசிரியர்கள் பெற வேண்டும். தாமதங்களுக் குரிய நியாயங்களை தேடுவதையும், அத்தகைய நியாயங்களை அடிக்கடி தெரிவிப்பதையும் அவமானமாக உணர்ந்து கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரத்தை விரயமாக்கும் ஆட்கள், சூழல், நிகழ்வுகளிலிருந்து தள்ளி இருப்பதற்கான உபாயங்களை கற்றுக்கொள்ள வேண்டும்.
தொழிலிடத்தில் மதிப்பும், அங்கீகாரமும், முன்னுரிமையும் கிடைப்பதற்குரிய நிகழ்ச்சித் திட்டம் ஒன்றைத் தயாரிக்க வேண்டும்.

நேரத்திட்டமிடலும், அதைவினைத் திறனுடன் நடைமுறைப்படுத்துவதும் விளைவுகளை அடிக்கடி விஞ்ஞானரீதியாக மதிப்பீடு செய்வதும் மிகவும் அவசியம். வேலையில் இணைவதன் வெற்றி என்பது உரிய பதவியுயர்வுகளுடனும், அதிகளவு தொழில் நண்பர் களுடனும், அதிகூடிய சமூகமதிப்புடனும், உன்னதமான சுயதிருப்தியுடனும் ஓய்வு பெறுவதில்தான் தங்கியுள்ளது. இந்த வெற்றியெல்லாம் ஆசிரியர்களின் நேரமுகாமைத்துவ திறனிலிருந்துதான் ஆரம்பிக்கின்றன என்பது உணரப்படுதல் வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மெய்வன்மைப் போட்டியில்.....





சுவாமி தொண்டு நாதரின் ஆசியுடன் சரஸ்வதி சிலை நிறுவுகை.....





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






அட்டைப்பட வடிவமைப்பு:- தமிழ்மாறன்

மல்ரிகலர் பதிப்பகம்,கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org